“ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்”

# கலசம்
# KALASAM

தை - மாசி - பங்குனி - 2021




ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

# RUBY'S
CATERING

020 8799 7180

www.rubyscatering.co.uk - mail@rubyscatering.co.uk

| உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு |
|---|---|---|





திருமணம் – பிறந்த நாள் – பூப்புனித நீராட்டு விழா
கலாச்சார நிகழ்ச்சிகள் – விருந்து உபசாரம்
அரங்கேற்றம் – வளைகாப்பு – பெயர் சூட்டும் விழா





## ACCREDITED SRILANKAN CATERERS @

Hilton – THISTLE HOTEL London Heathrow – Holiday Inn

உட்பட பிரபல ஹோட்டல்களில் அங்கீகாரம் பெற்ற
தரம் மிகு இலங்கை மற்றும்
தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......

Tel: 020 8799 7180
mail@rubyscatering.co.uk - www.rubyscatering.co.uk

மணி 29

# கலசம்
# KALASAM

ஒலி 97

www.saivamunnettasangam.com Charity Registration No:292085

FREE ISSUE

**கலசம்**
**நிருவாகக் குழு**

**ஆசிரியர்**
க ஜெகதீஸ்வரன்

**உதவி ஆசிரியர்கள்**
சி அற்புதானந்தன்
சுதர்சினி வாகீசன்

**விநியோகம்**
சோ நிரஞ்சன்
சு இரத்தினராஜா

**விளம்பரம் நிருவாகம்**
மா இந்துசேகரன்
வ இ இராமநாதன்

**இலங்கைத் தொடர்பு**
வை சிவனருட்செல்வர்

**வெளியீடு**
சைவ முன்னேற்றச் சங்கம்

**முகவரி**
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel/ Fax:
020 8514 4732

**மின்னஞ்சல்**
email:
smsukkalasam@gmail.com

## "இல்லங்கள் தோறும் எழுந்தருளி"

கோவிட் 19 வந்தது; உலகனைத்தும் கோலோச்சுகிறது. நமது கண்ணுக்குத் தெரியாத ஒரு நுண்ணணு, பல உயிர்களைப் பறித்துக்கொண்டு இருக்கிறது. பல இலட்சம் மக்கள் உயிரிழந்தார்கள்; இன்னும் இழந்துகொண்டு இருக்கிறார்கள். கடைகள், கல்விநிலையங்கள், அலுவலகங்கள், நாடக அரங்குகள், திரையரங்குகள் என எல்லாமே பூட்டப்பட்டன. பயணங்கள் தடைப்பட்டன. உணவகங்கள் வருவாய் இன்றி வாளாவிருக்கின்றன. கடவுள் நம்பிக்கை இல்லாத சிலர், கோயிலையே பூட்டவைத்த இந்தக் கோவிட், கடவுளைவிட மேலானதுதானே என்று கோஷமிட ஆரம்பித்துவிட்டார்கள். கலசமும் பிரசுரமாகவில்லை.

நாம் அறிந்தவரை எந்த நாட்டிலும் கோயில்கள் பூட்டப்படவில்லை. சிவாசாரியர்கள் தினமும் பாதுகாப்போடு பூசை செய்கிறார்கள். திருமணங்கள், வேறு வீட்டு விசேடங்கள் அனைத்துமே ஓரளவு மட்டுப்படுத்திய அளவில் நடைபெறுகின்றன. வீட்டில் இருந்தபடியே திருச்செந்தூரில் நடைபெற்ற கந்தசட்டி விழா, திருவண்ணாமலையில் நடைபெற்ற தீபத்திருவிழா, ஈழத்திலுள்ள பல கோயில்களில் நடைபெற்ற திருவிழாக்கள் என்று எல்லாவற்றையும் மக்கள் கண்டு களிக்கக்கூடியதாக இருந்தது.

அதனால் ஆண்டவன், மணிவாசகர் திருவெம்பாவையில் அருளியதுபோல **"இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளு"**கின்றான். தொழில்நுட்பம், நவீன கருவிகள் உதவியால் வீட்டிலிருந்தே வழிபட்டாலும் மனத்திலே கூடவே ஒரு நெருடலும் உண்டாகிறது. கடவுளை இப்படித் தரிசிப்பது சரியா என்பது மனத்தில் எழும் கேள்வி. அதுவே நெருடலுக்கான காரணமும் ஆகும். கோயிலுக்கு ஏன் போகவேண்டும் என்பதற்கான அறிஞர்கள் கூறிவைத்த காரணம், பலர் கூடி வழிபடும்போது, திருமறைகள், திருமுறைகளை ஓதும்போது அவ்விடத்தில் தெய்வசக்தி அதிகம் உண்டாகிறது என்பதுதான். அப்படியானால் நாம் கோயிலுக்குப் போகாமலேயே வழிபடுவதால் அந்தச் சக்தி கிடைக்காது என்ற முடிவுக்கே வரவேண்டும்.

தொலைக்காட்சியில் சமையல் நிகழ்ச்சி வருகிறது. அதை நாம் பார்க்கிறோம். அழகாக இருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் அந்த உணவின் மணத்தையும் சுவையையும் உணர இயலுமா? இயலாதே! அந்தச் சமையல் நிகழ்ச்சி போலவே இந்தச் சமய வழிபாடும் வந்துவிட்டது. அது வரவேற்கத் தக்கதன்று. தடுப்பு மருந்து, சிகிச்சை என்பவை மெதுவாக வந்தவண்ணம் இருக்கின்றன. எனவே நிலை மாறும் என்று நம்புவோம்: முன்னர் போலக் கோயில்சென்று வழிபடுவோம்.

**க ஜெகதீஸ்வரன், ஆசிரியர்**

# இந்த இதழில்


| | |
|---|---|
| தோற்றமும் ஆற்றலும் | 03 |
| கலசமும் கோவிட்டும் | 04 |
| "வினை தீர்க்கும் முகம்" | 05 |
| சினத்தின் தன்மை - கந்தபுராணச் சிந்தனைகள் | 09 |
| உத்தரகோசமங்கை - பயணக்கட்டுரை | 11 |
| உருகாதார் உளரோ? | 16 |
| ஸ்ரீ வரதராஜ செல்வவிநாயகர் கோயில் - ஒல்லாந்து | 18 |
| The Dancer, Divinity | 23 |
| இல்லறமே நல்லறம் | 27 |
| கண்ணனும் தாத்தாவும் | 30 |
| Hinduism in search of Answers | 35 |
| ஐந்தெழுத்தின் மகிமை | 39 |
| சைவ முன்னேற்றச் சங்கத்தின் வெளிநாட்டுப் பணிகள் | 40 |

# தோற்றமும் ஆற்றலும்

ஒரு பெரிய தேரின் அச்சாணி மிகச்சிறியது. இருப்பினும் அந்தத் தேர் சீராக ஓடுவதற்கு அது இன்றியமையாததாகின்றது. அதுபோல ஒருவர் தோற்றத்திலே சிறியவராக இருந்தாலும் அவர் செய்யக்கூடிய செயல் பெரியதாக இருக்கக்கூடும். அதனால், தோற்றத்தைக் கண்டு, அவர் தோற்றத்தில் சிறியவராக இருக்கிறாரேயென்று எள்ளி நகையாடுதல் நன்றன்று என்கிறார் வள்ளுவர்.

உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து

குறள் 667

அமிதாப் பச்சன் என்ற இந்தித் திரைப்பட நடிகரை உலகம் நன்கறியும். அவர் ஒருமுறை விமானத்திலே பயணம்செய்தார். அவருக்குப் பக்கத்து ஆசனத்தில் ஒரு நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்போல எளிமையாக ஒருவர் இருந்தார். அவர் தன்பாட்டில் பத்திரிகையைப் புரட்டிக்கொண்டிருந்தார். பேச்சுக் கொடுப்பதற்காக அமிதாப் அவர்பக்கம் திரும்பினார். “உங்களுக்கு என்னைத் தெரிகிறதா?” என்று கேட்டார்.
அவரோ, “மன்னிக்கவேண்டும். நீங்கள் யாரென்று எனக்குத் தெரியவில்லை” என்றார்.
“நீங்கள் திரைப்படங்கள் பார்ப்பதுண்டா?” இது அமிதாப்பின் அடுத்த கேள்வி.
“சில படங்கள் பார்த்திருக்கிறேன்” என்றார் அந்த மனிதர்.
அமிதாப்புக்கு ஒரே ஆச்சரியம். உலகமே என்னை அறியும். இவர் என்னைத் தெரியாது என் கிறாரே என்று யோசித்தார். பின்னர் அவரை நோக்கி, “நான் அமிதாப் பச்சன். உலகப் புகழ்பெற்ற இந்தித் திரைப்பட நடிகர்” என்றார்.
“ஓ! அப்படியா?” என்றுவிட்டு எவ்வித உணர்ச்சியும் காட்டாமல் அந்த மனிதர் தொடர்ந்து பத்திரிகையைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

என்னைப் பார்க்க எத்தனைபேர் வரிசையில் நிற்பார்கள்; முண்டியடித்துக்கொண்டு வருவார்கள். ஆனால் நான் இவ்வளவு அண்மையில் இருந்தும் இவரென்ன ஒரு சிறிதளவும் ஆர்வம் காட்டுவதாக இல்லையே என்று அதிசயித்தார் அமிதாப். விமானத்தை விட்டு இறங்கும்போது, “நீங்கள் யார்?” என்று அந்த மனிதரைக் கேட்டார் அமிதாப். “நான்தான் டாட்டா நிறுவனத்தின் உரிமையாளர்” என்று பதில் வந்தது. அமிதாப் அதிர்ச்சியில் இருந்து மீளமுன் அந்த நபர் போய்விட்டார். ஒரு மிகப் பெரிய நிறுவன உரிமையாளர் எவ்வித ஆர்ப்பாட்டமுமின்றி அமை தியாக அமர்ந்திருந்தார் என்பது ஆச்சரியந்தானே? அவரின் தோற்றத்தைப் பார்த்து தவறாக எடைபோட்டுவிட்டார் அமிதாப்.

பாண்டிய மன்னன் சமணத்திலே தோய்ந்து சைவத்தைப் புறக்கணித்துவந்தான். பாண்டியனின் மனைவி மங்கையர்க்கரசியாரும், மந்திரி குலச்சிறையாரும் இதனாற் கவலைகொண்டார்கள். எப்படி இந்தக் குறையைச் சரிசெய்யலாம் என்று ஆலோசித்தபோது திருஞானசம்பந்தரைப் பற்றிக் கேள்விப்பட்டார்கள். அவரைப் பாண்டிநாட்டுக்கு வரும்படி அழைத்தார்கள். அவரும் சம்மதித்து வந்தார். அவரைப் பார்த்ததும் மங்கையர்க்கரசியார் தடுமாறிவிட்டார். இவ்வளவு சிறிய பால கனைச் சமணர்கள் துன்புறுத்துவார்களே என்று பச்சாத்தாபப்பட்டார். ஆனால் ஞானசம்பந்தரோ இறையருளை நம்பியிருந்ததனால் எவ்வித பயமுமின்றி இருந்தார். அதை மங்கையர்க்கரசியார் உணரும்படி ஒரு பதிகமாகப் பாடியருளினார்.

பாண்டிய மன்னனின் மாதரசியே, மானின் மருண்ட விழிகள்போலக் கண்களை உடையவளே, பால்வடியும் வாயை உடைய ஒரு சிறுபாலகன் நான் என்று நீ பரிதாபம் கொள்ளாதே. ஆனைமலை போன்ற இடங்களில் இருந்து வந்து துன்பம் கொடுக்கின்ற சமணர்களுக்கு நான் எவ்விதத்திலும் சளைத்தவன் அல்லன். ஏனெனில் திரு ஆலவாயில் உறையும் இறைவன் எனக்குத் துணையாக இருக்கும்போது எனக்கு எவ்விதத் துன்பமும் விளையாது.

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவன் என்றுநீபரி வெய்திடேல்
ஆனைமாமலை ஆதியாயவி டங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு ஆலவாயர னிற்கவே

*திருமுறை 3 பதிகம் 39 பாடல் 1*
*நன்றி: தமிழர் தகவல் மே 2017*

# கலசமும் கோவிட்டும்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்துமூன்றாம் ஆண்டு Birds என்றொரு திரைப்படம் வந்தது. திகில் படங்கள் தயாரிப்பில் மிகவும் புகழ்பெற்ற அல்பிரட் கிச்கொக் என்பவரின் படம் அது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்திரண்டில் டாப்னி டு மோரியர் என்ற பெண்மணி எழுதிய நாவலைத் தழுவி எடுத்த படம். மனிதர்கள் பறவைகளைப் பலகாலமாகத் துன்புறுத்தி வருகிறார்கள். அதனாற் பாதிக்கப்பட்ட பறவைகள் ஒன்றுகூடி மனிதர்களுக்கு எதிராக அதிரடி நடவடிக்கையில் இறங்குகின்றன. மனிதரின் வாழ்க்கையை வாட்டுகின்றன. அதுதான் படத்தின் கதை. இதுபோலவே இப்போது கொரோனா வந்ததோ என்று எண்ணம் எழுகிறது. இயற்கையை மனிதன் சின்னாபின்னம் ஆக்குவதால் இது வந்திருக்கலாம். இப்போது மனித இனம் வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கின்றது.

பெருந்தொற்றுப் பரவிய காரணத்தால் கலசம் வெளியிடும் வேலை முடங்கியது. விநியோகிக்க இயலாது; படிக்க எடுப்பார் இல்லை; பதிப்பிப்பதால் என்ன பயன் என்ற எண்ணம் வேலையை முடக்கிவிட்டது. ஆனால், ஆண்டு ஒன்றாகியதால் முடங்கிய கலசத்தை மின்னிதழாக முடுக்கி விடலாம் என்ற சிந்தனை நிருவாகத்தில் ஏற்பட்டது. அதன் விளைவுதான் இந்த இதழ்.


தொற்றுநோய் பற்றிய ஒரு குறிப்பு நமது சைவத்திலும் உண்டு. திருக்கொடிமாடச் செங்குன்றூர் என்ற இடத்தைத் திருஞானசம்பந்தர் அடைகிறார். அது முன்பனிக்காலம். அந்த ஊரில் உள்ள பலருக்கும் சம்பந்தருடன் சென்ற தொண்டர்களுக்கும் குளிர்சுரம் பிடித்துக்கொண்டது. அனைவரும் மிகவும் வருந்திப் பிள்ளையாரிடம் முறையிட்டார்கள். பிள்ளையாரும் “அவ்வினைக் கிவ்வினை” எனத் தொடங்கி ஒரு பதிகம் அருளினார். ஒவ்வொரு திருப்பாடலின் நிறைவிலும் “வினை தீண்டப்பெறா திருநீலகண்டம்” என்று ஆணையாக அருளினார். ஊரார் உட்பட அனைவரும் பிணி நீங்கி எழுந்தனர்.

இந்தப் பதிகம் முதலாந் திருமுறையில் நூற்றுப்பதினாறாவது பதிகமாக உள்ளது. பொதுப்பதிகம். பண் வியாழக்குறிஞ்சி. இந்தப் பண்ணுக்குச் சௌராஷ்டிர இராகம் இணையாகும். நாமும் ஓதிப் பயனடைவோம்.

- **ஆசிரியர்**

# "வினை தீர்க்கும் முகம்"

க ஜெகதீஸ்வரம்பிள்ளை



“ஏறுமயில் ஏறி விளையாடு முகம் ஒன்றே” என்ற திருப்புகழ் மிகவும் பிரபலமானது. பல இடங்களில் இந்தத் திருப்புகழ் பாடப்படுவதை நாம் கேட்கலாம். முருகனின் ஆறு திருமுகங்களையும் அருணகிரியார் அழகாக வர்ணித்திருக்கிறார். ஒவ்வொரு திருமுகமும் செய்த, செய்கின்ற செயல்கள் இந்தத் திருப்புகழிலே ஒழுங்காகச் சொல்லப்பட்டிருக்கின்றன. மயிலில் ஏறி விளையாடுவது, ஞானமொழி பேசுவது, அடியார்களின் வினை தீர்ப்பது, வேல் வாங்கி நிற்பது, சூரரை வதைத்தது, வள்ளியை மணம் புணர்ந்தது என ஆறு திருமுகங்களையும் அடுக்காகச் சொன்னார் அருணகிரியார். எட்டுச் சீர்கள் கொண்ட வரிகளாலான ஆசிரியவிருத்தம் என்ற பாடல் வடிவம் இது. ஆனால் வரிகளின் நீளம் கருதி ஒவ்வொரு வரியையும் இரண்டு வரிகளாகப் பிரித்து எழுதுவது வழக்கம்.

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே

என்று முதல் வரி வரும்.

இந்தத் திருப்புகழைப் பாடும்போது, அடுத்த வரியை,

“கூறுமடி யார்கள்வினை **தீர்த்தமுகம்** ஒன்றே” என்று சிலரும்
“கூறுமடி யார்கள்வினை **தீர்க்குமுகம்** ஒன்றே” என்று சிலரும் பாடுவதைக் கேட்கலாம்.

நிச்சயமாக இரண்டும் சரியாக இருக்க இயலாது. ஒன்றுதான் சரியாக இருக்கவேண்டும்.

எப்படிப் பாடினாலென்ன என்று வாதிடுவோர் ஒரு சிலர். நாங்கள் கடந்த பல வருடங்களாக இப்படித்தான் பாடுகிறோம் என்பர் வேறு சிலர். எங்கள் ஊரில் இதுதான் பாடம் என்போர் இன்னும் சிலர்.

அருணகிரியார் எப்படி இத் திருப்புகழை அருளினார் என்பதை அறியவேண்டியது மிகவும் அவசியம். ஏனெனில்,

அழித்துப் பிறக்க ஒட்டா அயில்வேலன் கவியை அன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றிலீர் எரிமூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெங் கூற்றன் விடுங்கயிற்றால்
கழுத்திற் சுருக்கிட்டு இழுக்குமன்றோ கவி கற்கின்றதே

என்று அந்த அருணகிரியாரே கந்தரலங்காரத்தில் பாடிப்போந்தார். "முருகனின் அருட்பாடல்களை எழுத்துப்பிழையறக் கற்றுப் பாடுங்கள். நெருப்பு எரிவதுபோன்று கண்களில் புகைவர, கொடிய இயமன் வந்து கழுத்திலே பாசக்கயிற்றைச் சுருக்கிட்டு இழுக்கும்போதா பாடல்களைச் சரியாகக் கற்கப்போகிறீர்கள்?" என்று கேட்கிறார் அவர். அப்படிக் கேட்கும் அருணகிரியாரின் பாடலையே

1. நாம் பிழையாகக் கற்றுப் பாடலாமா?
2. இல்லையானால் எந்தப் பதத்தைச் சரியென்று தீர்மானிப்பது?
3. எப்படித் தீர்மானிப்பது? இவை அடுத்து எழும் கேள்விகள்.

வேல் வாங்கியதும் சூரரை வதைத்ததும் வள்ளியை மணந்ததும் முடிந்த நிகழ்வுகள். அவை இறந்தகாலம். மயிலில் விளையாடுவதும் ஈசனுடன் ஞானமொழி பேசுவதும் அடியார்களின் வினையைத் தீர்ப்பதும் எப்போதும், அன்றும் இன்றும் என்றும் நிகழ்பவை; நிகழ்ந்துகொண்டிருப்பவை.

அடியார்கள் குறைகளை வேகமாக வந்து முருகன் தீர்ப்பதால் இறந்தகாலத்தில் சொல்வது சரி என்று சிலர் சொல்வர். அதனால், "தீர்த்த முகம்" என்பதே சரி என்பது அவர்களின் தரப்பு வாதமாக அமைகின்றது. உதாரணமாக, ஒருவரை நாம் வரும்படி அழைக்கும்போது, விரை பொருளில் "இதோ வந்திட்டேன்" என்று சொல்வதுபோல என்று கொள்ளலாம். ஆனால் இந்தக் காரணம் இவ்விடத்தில் ஏற்புடையதாகத் தெரியவில்லை. இந்தத் திருப்புகழில் முருகன் வேகமாக வந்து அடியார்கள் வினை தீர்க்கிறான் என்பது வலிந்து பொருள் கொள்வதாகும். எனவே இறந்தகாலத்திற் சொல்ல இங்கே இடமில்லை; பொருத்தமுமில்லை.

அதனால் இலக்கணத்தில் என்ன சொல்லப்படுகிறது என்று தேடினேன். கடந்தகால நிகழ்வுகளை இறந்த காலத்திலும் எப்போதும் நடப்பவற்றை நிகழ்காலத்திலும் சொல்வதுதான் மரபு என்கிறது இலக்கணம். இந்த விதிபற்றி நன்னூல் சொல்வதை இங்கே நோக்கலாம்.

"முக்காலத்திலும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழுங் காலந்தானே" சூத்திரம்- *383*

என்று அங்கே சொல்லப்பட்டிருக்கிறது.

இதன் பொருள்:

"தம் தொழில் இடையறாமல் மூன்று காலங்களிலும் ஒரு தன்மையை உடையனவாய் நிகழும் பொருள்களை நிகழ்காலத்தினாற் சொல்லுவர் புலவர்" - ஆறுமுகநாவலர்

"முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை
எம்முறைச் சொல்லும் நிகழும் காலத்து
மெய்ந்நிலை பொதுச்சொல் கிளத்தல் வேண்டும்" என்று தொல்காப்பியமும் சொல்கிறது.
ஆங்கிலத்திலும் இதேபோன்று எப்பொழுதும் நடக்கும் செயலை நிகழ்காலத்தில் கூறும் வழக்கு

உண்டு. "Universal truth is always in the present tense" என்பதே அது.
இதற்கு உதாரணமாக, எப்பொழுதும் கிழக்கில் சூரியன் உதிக்கிறது என்பதை, "The Sun rises in the East" என்றே சொல்வதைக் காணலாம்.

மேற்சொன்ன காரணங்களின்படி "தீர்க்குமுகம்" என்பதுதான் சரியென்ற முடிவுக்கு வர இலக்கணம் எம்மைத் தூண்டுகின்றது.

ஆனால் அதில் இன்னொரு சிக்கல் இருக்கிறது. இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் இந்தத் திருப்புகழைப் பாடுபவர்கள் இரண்டுவிதமாகவும் பாடுகிறார்கள். சிலர் "தீர்த்த முகம்" என்றும் சிலர் "தீர்க்கு முகம்" என்றும் பாடுகிறார்கள். எனவே புத்தகங்களில், அச்சில் இந்தத் திருப்புகழ் எப்படி இருக்கிறது என்று தேடினேன். அங்கேயும் இதே சிக்கல் தொடர்ந்தது. பத்திப் பாடல்கள் தொகுத்து வெளியிடுவோரும் நினைவுமலர் பிரசுரிப்போரும் சரியான பதிப்புக்களைப் பார்ப்பதில்லை. ஒன்றில் கேள்விஞானத்தை வைத்துப் பதிப்பிப்பார்கள், அல்லது பிழையான இன்னொரு புத்தகத்திலிருந்து பிரதி செய்வார்கள். அதனால் அவற்றைச் சரியானவை என்று கொள்ளவியலாது.

இதுபற்றி அறிஞர் இருவரிடம் என் விவாதத்தைச் சொல்லி ஆலோசனை கேட்டேன். இருவரும் சொன்ன பதில்கள் ஒரே மாதிரி இருந்தன. இலக்கணம் சொல்வதன்படி **"தீர்க்குமுகம்"** என்பதுதான் சரி. ஆனால் எதற்கும் ஒரு நல்ல பதிப்பைப் பார்ப்பது நல்லது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள்.

அடுத்து, லூயிஷாம் சிவன்கோயிலில் ஓதுவார் மூர்த்தியாக இருக்கும் சிவத்திரு சாமி தண்டபாணி அவர்களை அணுகினேன். தேவாரத் திருமுறைகளை முறையாகக் கற்றவர் என்பதாலும் தருமபுர ஆதீனத்தில் பயிற்சி பெற்றுப் பல வருடங்கள் ஓதுவாரகவே கடமையாற்றுபவர் என்பதாலும் அவர் சொல்வது சரியாக இருக்கும் என்பது எனது நம்பிக்கை. அவரும், "நான் **தீர்க்குமுகம்** என்றுதான் ஓதிவருகிறேன். கிருபானந்தவாரியார் சுவாமிகள் பதிப்பிலும் அப்படித்தான் இருக்கிறது" எனறு உறுதியாகச் சொன்னார். வாரியார் சுவாமிகள் தீவிர முருகபத்தர். திருப்புகழுக்கு உரை எழுதியுள்ளார். அதனால் அவரின் பதிப்பைச் சரி யென்று கொள்ளலாம்.

முன்பு இந்த விவாதம் பற்றி அமுதசுரபி என்ற பத்திரிகையில் ஒரு கேள்வி பதில் பகுதியில் பிரசுரமாகியிருந்தது. அதைப் படித்து, கலசம் பத்திரிகையிலும் ஒரு பெட்டிச் செய்தியாகப் பிரசுரித்தது நினைவுக்கு வந்தது. அது இதோ!
கேள்வி: ஏறுமயில் ஏறி விளையாடுமுகம் ஒன்றே என்ற பாடலில் வரும் வரி, கூறுமடியார்கள் வினை "தீர்த்த" முகமா, இல்லை கூறுமடியார்கள் வினை "தீர்க்கு" முகமா?

விமலன், லண்டன்

*பதில்:*

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுக மொன்றே
வள்ளியைம ணம்புணர வந்தமுக மொன்றே

என்ற வரிகளைப் பாருங்கள். வேல் வாங்கி நின்றது, சூரனை வதைத்தது, வள்ளியை மணந்தது எல்லாம் கடந்தகால நிகழ்வுகள். அடியவர்கள் தீவினைகளை நேற்றல்ல, இன்றல்ல, என்றென்றும் தீர்ப்பவன் அல்லவா கந்தக்கடவுள்! அறுமுகக் கடவுளை ஒருமுகமாய் வழிபட்டால், எதிர்காலத் தீவினைகளையும் அவன் தீர்ப்பான். எனவே **தீர்க்குமுகம்** எனச் சொல்லி வழிபடுவதே சிறப்பு.


*அமுதசுரபி - மார்ச் 2016 பக்கம் 61*

இவை எல்லாவற்றையும் சரியென்று உறுதிசெய்யுமுன்னர் இன்னுமொரு புத்தகத்தையும் பார்த்துவிடலாம் என்று முடிவு செய்தேன். திருப்புகழுக்கு உரை எழுதியவர்களுள் தணிகைமணி செங்கல்வராயபிள்ளை அவர்களும் ஒருவர். இவர் சைவத் தமிழ்ப் பரம்பரையில் வந்தவர். மறைமலை அடிகள் போன்ற அறிஞர்களிடம் தமிழ் கற்றவர். பல நூல்களை எழுதியுள்ளார். இவரின் திருப்புகழ் உரை ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தோராம் ஆண்டு *(1951)* முதன்முதல் வெளியிடப்பட்டது. திருத்தொண்டர் புராணத்துக்குச் சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியார் அவர்களின் உரை மிகச் சிறந்ததென்று அறிஞர்கள் மதிப்பார்கள். அதுபோலத் திருப்புகழ் உரையில் செங்கல்வராயபிள்ளை அவர்களின் உரையைச் சிறந்ததாக அறிஞர் கொள்வர். அதனால் அது தரமானதாக இருக்கும் என்பதால், அவரின் புத்தகத்தையும் பார்த்தேன். அதிலும் “தீர்க்கு முகம்” என்றே இருக்கிறது. இதோ, அந்த நூலில் உள்ள திருப்புகழ்:

**ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே**
**ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே**
**கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே**
**குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே**
**மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே**
**வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே**
**ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்**
***ஆதியம ராவதி யமர்ந்தபெரு மாளே!**

*** “ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே” என்றும் பாடபேதம் உண்டு.**

எனவே **“கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே”** என்பதுதான் சரி என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது. இலக்கண விதிப்படியும் சிறந்த பதிப்புக்களில் உள்ளபடியும் அதுவே உறுதியாகிறது. எனவே, “தீர்த்த முகம்” என்று எழுதாது, அச்சிடாது, பாடாது, இன்றுமுதல் “தீர்க்குமுகம்” என்று எழுத்துப் பிழையறக் கற்போம்!; ஓதுவோம்!



நன்றி: பண்டிதர் திரு க உமாமகேசுவரம்பிள்ளை - இலங்கை
வழக்கறிஞர் திரு செ சிறீக்கந்தராசா - இலண்டன்

தணிகைமணி செங்கல்வராயபிள்ளை அவர்களின் பதிப்பைப் பார்க்க உதவிய நண்பர் திரு வி பூபாலசிங்கம் அவர்களுக்கும் நன்றி

# சினத்தின் தன்மை

## கந்தபுராணச் சிந்தனைகள்

முனைவர் சங்கரப்பிள்ளை சிவலோகநாதன்

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்

சினம் என்கின்ற சேர்ந்தாரை அழிக்கின்ற நெருப்பு ஒருவனுக்கு இனம் என்கின்ற இன்பமயமான தெப்பத்தையும் சுட்டு அழிக்கும் என்று வள்ளுவப் பெருமான் சொல்கின்றார். சூரன் தன்னுடைய பிரதானிகளுடன் வரப்போகின்ற யுத்தம் பற்றி மந்திராலோசனை செய்கிறான். "செய்து முடிக்க உள்ள செயலும், அதன் தொடக்கமும், அச் செயல் செய்வதால் உண்டாகும் பயன்களும், அதற்கு வரும் இடையூறுகளும் ஆன இவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்துக் கருமங்களை ஒருவர் செய்வாரேயானால் அவரிடம் குற்றம் வந்து சேர்வதற்கு இடமுண்டோ? இல்லை" என்று சிங்கமுகாசுரன் தன்கருத்தைக் கூறத் தொடங்குகிறான்.

முற்றுற வருவது முதலும் அன்னதால்
பெற்றிடு பயன்களும் பிறவும் தூக்கியே
தெற்றென உணர்ந்துபின் பலவுஞ் செய்வரேல்
குற்றமொன் றவர்வயிற் குறுக வல்லதோ!

சூரன் அமைச்சியற் படலம் 93

இந்திரன் முதலான அரசர்களையும் தேவர்களையும் துன்புறுத்தியவர் தம் செல்வத்துடனே அழிந்தார்களேயன்றி, வாழ்ந்தவர்கள் இவர்கள் என்று எவரையும் சொல்லமுடியுமா? முடியாது. தேவர்களைக் கடலில் மீன்களைப் பிடித்து வருமாறு செய்வித்தாய்? இவ்வாறு செய்வது நல்லதா? இந்திரனுக்கு துன்பத்தை ஏற்படுத்தி அவனது அரசினை அழித்தாய்? தேவர்களைச் சிறையில் அடைத்தாய். தலைவனே! அவர்களால் நமக்கு இந்தத் துன்பம் ஏற்பட்டதேயன்றி எமக்கு என்ன பயன் ஏற்பட்டது.. சிறந்தவர்களான தேவர்களின் சிறையை விட்டுவிடாது நீ இருப்பாயேயானால் பகைவர்களின் நகரங்களையெல்லாம் எரித்த சிவபெருமானின் மகனான முருகப்பெருமான் நம் குலம் எல்லாம் அழியுமாறு கொன்று உன்னையும் கொல்வார். இது உண்மையேயாகும். என்று சிங்கமுகாசுரன் சொல்லி முடித்தான். சூரன் உண்மையை உணரவில்லை. கடுங்கோபங் கொண்டான். "நான் இட்ட பணிகளைச் செய்து கொண்டு மறைந்துபோன இந்திரனுக்கும் தேவர்களுக்கும், சிறுவனுக்கும் கைலையிலுள்ள பூதங்களுக்கும் அஞ்சி உள்ளங் குலைந்தாயோ? சிவபெருமான் தந்த வரத்தை யார் மாற்ற வல்லவர்? யார் என்னை எதிர்த்தாலும் அழியேன். இங்கு எனக்கு ஒப்பானவர் யார் இருக்கின்றார்கள்" என்று சொன்னான். சிங்கமுகாசுரன் விடவில்லை. "பெறுதற்கரிய செல்வங்களையும் ஆற்றல்களையும் பெற்ற நீ, அறத்தையும் கடைப்பிடித்து, நெறிப்பட நடவாது, உனக்குள்ள பேராற்றலால் தேவர்களைக் கோபித்துச் சிறையில் வைத்தாய். உன் செயலைக் கண்டு நின் வலிமையை அழித்து உன்னைக் கொல்ல ஈசன் திருவருள் கொண்டுள்ளார்" என்று பலவற்றையும் கூறிய சிங்கமுகாசுரன், தேவர்களைச் சிறையிலிருந்து விட்டுவிடும்படி சொல்கிறான். சூரன் சினத்தின் எல்லைக்கே போய் விடுகிறான். "காற்றாலே தள்ளப்பட்டும், தீயாலே சுடப்பட்டும், கங்கையாற்றிலே தாக்குண்டும், சரவணப் பொய்கையிலே அலையில் மோதுண்டும், தாயல்லாத வேற்றுத்தாயாரின் முலைப்பாலையுண்டும்

அழுது விளையாடும் நேற்றுப் பிறந்த சிறுவனையா முழுமுதற் பரம்பொருளென்று நினைத்தாய். தேவரின் சிறப்பைப் பேண, ஏகநாயகனான சிவபெருமானே வந்தாலும் எதிர்த்துப் போரிடுவேன். இனி இப்படிப் பேசாதே" என்று சொல்லிய சூரபத்மன் மேலும் பல பழிப்புரைகளைச் சிங்கமுகாசுரனுக்குச் சொன்னான். சூரனுடைய மனத்தை மாற்றமுடியாதெனக் கண்ட சிங்கமுகாசுரன் போரை ஆதரிக்கிறான். மந்திராலோசனை முடிவடைகிறது.. யுத்தம் தொடங்கி அசுரர்கிளையோடு சூரனும் மாண்டான்.


இந் நிகழ்ச்சியின் மூலம், செல்வம் பெற்றிருக்கும் காலத்தில் உண்டாகும் சினமானது கற்றவரின் அறிவையும் பேதப்படுத்திவிடும்,

பெற்றிடு திருவினில் பிறந்த வெஞ்சினம்
கற்றவர் உணர்வையும் கடக்கும்.....

- சூரன் அமைச்சியற் படலம் *101*

என்ற பெரிய தத்துவத்தையும் கூறிச் சொந்தத் தம்பியான சிங்கமுகாசுரனையும் இழிவுபடுத்திப் பேசவைத்து, இனம் என்ற இன்பத் தெப்பத்தையும் சினம் சுட்டழிக்குமெனக் கந்தபுராணம் சொல்லா நிற்கின்றது.

# சைவ வினாவிடை




யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் சைவக் கருத்துக்களை மக்களிடையே பரப்பவென இலகுவான தமிழில் வினாவிடையாக எழுதிய நூல் "சைவ வினா விடை". இது முதலில் *1873*இல் வெளிவந்தது. அந்நூலை வெளிநாட்டிலே பிறந்து வளரும் பிள்ளைகள் படித்து அறியவேண்டும் என்ற நோக்கால் ஆங்கிலத்தில் திரு தியாகமூர்த்தி அவர்களும் திரு சகாதேவன் அவர்களும் மொழிபெயர்த்தனர். அதில் இருந்து இரண்டு கேள்விகளும் பதில்களும்:

1. Q: Who is the creator of the Universe?
   A: Sivaperuman
2. Q: What are the attributes of Sivaperuman?
   A: Eternal, Omniscient, Omnipotent.

இந்நூல் பற்றி விம்பிள்டன் ஸ்ரீகணபதி ஆலயத்தின் ஒருங்கிணைப்பாளர் மருத்துவ கலாநிதி Dr மகேசுவரன் எழுதிய அணிந்துரையிலிருந்து:

*"Shree la Shree Arumuga Navalar's 'Saiva Vina Vidai' has been an invaluable source of reference for frequently asked questions in Hinduism, ever since it was written in the 19th Centuary. It was a vital reference text for those of my generation who did GCE O/L examination in Hinduism in Sri Lanka....."*
*"With Saivites now scattered all over the world, there is an urgent need to have translations of this book for those large number fo Saivite Tamils who cannot read or understand the Tamil language......."*

This book can be obtained from: Mr K Thiagamoorthy, B.Sc (Eng.), C.Eng, M.I.C.E
38 Park Lane, Wallington SM6 0TN, UK
Phone: +44 208 669 8057.

# உத்தரகோசமங்கை

## பயணக்கட்டுரை

சாவகச்சேரி Dr க கதிர்காமநாதன்

உத்தரம் - உபதேசம், கோசம் - இரகசியம், மங்கை - பார்வதி

சிவபெருமான் பார்வதிதேவியாருக்கு வேதா கமங்களின் இரகசியங்களை உபதேசித்த இடம் என்பதால் உத்தரகோசமங்கை எனப் பெயர்பெற்றது.

***இறைவன்:*** மங்களேசுவரர், மங்களநாதர், காட்சிகொடுத்த நாயகர், பிரளயாகேசுவரர்
***இறைவி:*** மங்களேசுவரி, மங்களாம்பிகை, சுந்தரநாயகி
***தலமரம்:*** இலந்தை
***தீர்த்தம்:*** அக்கினிதீர்த்தம்

***வேறுபெயர்கள்:*** தட்சிண கயிலாயம், பத்ரி காரண்யம் (இயற்கைவனம்), வியாக்கிரபுரம், ஆதிசிதம்பரம், பிரம்மபுரம், சதுர்வேதபுரி, மங்களபுரி

“மண் தோன்றியபோதே மங்கை தோன்றினாள்” என்ற பழமொழி இக்கோயிலின் பழைமையை உணர்த்துகின்றது. அதனால் இவ்வாலயத்தின் மண்ணை மிதித்தாலே முத்தி என்பர்.

தாழம்பூ சிவனுக்கு ஆகாது என்பர். ஆனால் இங்கு தாழம்பூ அர்ச்சனை நடைபெறுகிறது.

அணிபொழில் உத்தரகோச மங்கைக்கு அரசே என்பது போன்று மணிவாசகர் தனது திருவாசகத்தில் முப்பத்தெட்டு இடங்களில் இந்த ஆலயத்தின் மேன்மையைப் புகழ்ந்து பாடினார். அதற்கும் மேல் மாணிக்கவாசகருக்கு சிவபெருமான் உருவக்காட்சி கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

***பயணம்:*** *22.09.2019* இரவு இராமேசுவரத்தை அடைந்தோம். கோயிலுக்குச் சமீபத்தில் உள்ள தெருக்களில் ஒரே இசை, ஆட்டம், கூட்டமாக இருந்தது. என்ன காரணம் என்று வின வியபோது அன்று கடல் மாதா (சமுத்திர மாதா) வுக்கு விழா எடுக்கும் நாள் என்று சொன்னார்கள். இது வருடந்தோறும் நடக்கும் ஒரு நிகழ்வு. அடுத்த நாள், *23.09.2019* திங்கட்கிழமையன்று இராமேசுவரத்தில் திரு அப்துல் கலாம் அவர்கள் இருந்த வீடு, பின்னர் அவரின் சமாதி ஆகியவற்றைப் பார்த்தோம். *2016*இல் நாங்கள் பார்த்ததைவிடப் பல மடங்கு பெரிய அளவில் கட்டடம் கட்டப்பட்டு பல ஊழியர்களைக்கொண்டு அவரது வாழ்க்கை வரலாறு, பேச்சுக்கள், சாதனைகள், போதனைகள் யாவும் காட்சிப் படுத்தப் படுகின்றன. சமாதி தனிக் கட்டடமாக வணங்கக் கூடிய இடத்தில் உள்ளது. இராமேசுவரம் செல்வோர்கள் தமிழுக்குப் பெருமை சேர்த்த இம்மகானைப் பற்றிப் பார்ப்பது நல்லது என்பது எனது அபிப்பராயம்.

*23.09.2019* அன்று இராமேசுவரத் திலிருந்து புறப்பட்டு மதியநேரம் உத்தர கோசமங்கையை அடைந்தோம். முதலில் ஏழு நிலை கொண்ட கோபுரத்தைக் கண்டு தரிசித்தோம். இதன் இடது பக்கத்தில் ஒரு சிறு கோபுரம் உண்டு. உள்ளே நடந்து சென்றால் வலது பக்கத்தில் ஐந்து நிலைகள் கொண்ட கோபுரத்தையும் இடப்பக்கத்தில் மூன்று நிலைகளுள்ள கோபுரத்தையும் காணலாம். வலது பக்கமுள்ள கோபுரத்தின் முன்னால் நர்த்தன விநாயகரும் சுப்பிரமணியரும் காட்சிகொடுக்கிறார்கள். சற்று உள்ளே போனால் சீடர்கள் இல்லாது தட்சிணாமூர்த்தி மட்டும் இருக்கிறார்.
மங்களேசுவரர் லிங்க உருவத்தில் சதுர

வடிவான ஆவுடையாரோடு இருந்து அருள்பாலிக்கிறார். நாங்கள் அர்ச்சனை செய்தோம். பிரகாரங்களில் திருப்பொன்னூசல், நீத்தல் விண்ணப்பம் ஆகிய திருவாசகப் பதிகங்கள் கல்லிலே பொறிக்கப்பட்டுள்ளன.

மங்களாம்பிகை நான்கு திருக்கரங்களுடன் காட்சியளிக்கிறார். ஒரு கரம் அபயகரம். இன்னொரு கரத்தில் தாமரையும் மூன்றாவுது கரத்தில் உருத்திராட்சமும் வைத்திருக்கிறார். நாலாவது கரம் தொடையில் வைத்திருக்கிறார். இந்த அம்பாள் அரனைப் பூசிப்பதாக கூறப்படுகிறது.

இங்குள்ள நடராஜர், கொடிமரம், பலிபீடம், நந்தியோடு தனியாகக் கோயில் கொண்டுள்ளார். இக்கோயிலுக்கு ஆதிசிதம்பரம் என்று பெயருண்டு. நடராஜர் சுமார் ஐந்தரையடி உயரமாக இருக்கிறார். விலைமதிப்பற்ற மரகத் திருமேனி. இவர் சுவரோடு அமைக்கப்பட்டு இருப்பதால் அதிசயமாகக் காட்சியளிக்கிறார். பல இடங்களில் நடராஜர் செப்பினால் ஆன சிலையாக திருவாசியுடன் இருப்பதையே காண இயலும். இப்படியான மரகதத் திருமேனி கொண்டு ஆண்டு முழுவதும் சந்தனக் காப்புடனேயே தரிசனம் கொடுக்கும் நடராஜரை வேறு இடத்தில் காண இயலாது. இவருக்கு உற்சவமூர்த்தியும் உண்டு. இங்கு திருவாதிரைத் தரிசனம் மிகவும் பிரசித்தி பெற்றது.


மரகத நடராஜர்

**ஸ்படிகலிங்க அபிஷேகம்:** முன் மண்டபத்தை நாங்கள் மழையில் நனைந்து சென்றடைந்தோம். அங்கு ஒருமணியளவில் அபிஷேகம் நடக்குமென்றனர். மக்கள் குழுமியிருந்தனர் அலுவலகம் சென்று ஆளுக்கு இருபத்தைந்து ரூபா கொடுத்துச் சீட்டுப் பெற்றுக்கொண்டு நாமும் அங்குள்ளவர்களோடு இணைந்தோம். சிவாசாரியார் தாமதமாகவே வந்தார். மக்கள் பொறுமையாக அமைதியாக இருந்தனர். அபிஷேகம் அழகாக, மெதுவாக நடந்தது. நிறைவானதும் பிரசாதம் பெற்றோம்.

இக்கோயிலின் மூலத்தான மண்டபத்தில் கல்லில் மண்டோதரியின் பெயர் பொறிக் கப்பட்டுள்ளது. இதனால் இராவணனோடு சம்பந்தப்பட்ட பழைமையான ஆலயமாக இது கருதப்படுகிறது.

உத்தரகோசமங்கையில் தங்க இடவசதி உண்டு. இராமநாதபுரந்தான் அண்மையிலுள்ள ரயில் நிலையம். இங்கிருந்து பஸ் மூலம் இலகுவாகக் கோயிலை அடையலாம்.. சமீபமாக உள்ள விமான நிலையம் இராமநாதபுரம் - மதுரை ஆகும்.

**திருவாதிரை (ஆருத்திரா) தரிசனம்:**

மார்கழிமாதத் திருவாதிரை நட்சத்திரம் சிவனுக்கு உரியது. இந்தநாள் பத்துத் தினங்கள் கொண்ட திருவெம்பாவை வழிபாட்டின் நிறைவு நாளாகவும் உள்ளது குறிப்படத்தக்கது. மார்கழி தட்சிணாயத்தின் கடைசி மாதமாகும்.

**தரிசன வரலாறு:**

சிவபெருமானை மதிக்காது தாருகாவனத்து முனிவர்கள் பெருவேள்வி செய்தனர். சிவன் பிட்சாடனர் உருவங் கொண்டு பிச்சை எடுக்கவென முனிவர்களின் வதிவிடங்களுக்குச் சென்றார். முனிவர்களின் பத்தினிகள் தம்மை மறந்து பிட்சாடனர் அழகில் மயங்கி அவர்பின்னே சென்றனர். இதனால் வெகுண்ட முனிவர்கள் வேள்வித் தீயில் மதயானை,

முயலகன், மான், தீப்பிழம்பு, உடுக்கை என்பவற்றை ஏவினர். சிவபெருமான் மதயானையைக் கொன்று அதன் தோலை அணிந்தார். மான், தீப்பிழம்பு, உடுக்கை ஆகியவற்றைத் தானே தரித்துக்கொண்டு முயலகன்மீது வலதுகாலை ஊன்றி, இடதுகாலைத் தூக்கி நடனமாடினார். இதுவே திருவாதிரை தரிசனமாகும்.

**உத்தரகோசமங்கை:**

மார்கழி மாதத் திருவாதிரையன்று மரகத நடராஜருக்கு முதலில் சந்தனக்காப்பு அகற்றப்படும். பக்தர்கள் போட்டிபோட்டு அந்தச் சந்தனத்தைப் பெற முயல்வர். பின்னர் மிக விசேஷமாக விமரிசையாக அபிஷேகம் நடைபெறும். அபிஷேகம் முடிந்ததும் அலங்காரம் செய்யப்படும். மறுநாட்காலை சந்தனக்காப்பு அணிவிக்கப்படும். இந்தச் சந்தனக்காப்பு அடுத்த மார்கழித் திருவாதிரை வரை இருக்கும். அபிஷேகம் நடைபெறும் போது நடராஜர் அணிந்திருக்கும் புலித்தோல் கூடத் தெளிவாகத் தெரியும்.

**சிதம்பரம்:**

இத்தலத்தில் மூலவரே உற்சவமூர்த்தியாக திருவாதிரைக்கு முதனாள் தேரில் வலம்வருவார். பின்னர் தேரிலிருந்து இறங்கி ஆயிரக்கால் மண்டபத்தில் வந்து தரிசனம் கொடுப்பார். பின் அதிகாலை இரண்டு மணி வரையிலிருந்து ஆரம்பமாகி அபிஷேகம் நடைபெறும். இலட்சக்கணக்கான மக்கள் இந்தக் காட்சியைக் கண்டு தரிசிக்க வந்துகூடுவார்கள். *17.12.2013* அன்று நடராஜரை மலர் அலங்காரம் எதுவும் இன்றி முழுத் திருவுருவத்தைப் பார்த்துத் தரிசிக்கும் பேறு கிடைத்தது. அலங்காரத்தில் எப்போதும் மறைந்திருக்கும் திருவுருவத்தை அப்படிப் பார்த்தது ஒரு ஆனந்தமான அநுபவமாகும். திருவெம்பாவைக் காலத்தில் மாணிக்கவாசகரின் திருவுருவத்தை நடராஜர்முன் எழுந்தருளச் செய்து திருவெம்பாவை ஓதப்படும். தேரிலன்றும் தேரிலிருந்து இறங்குமுன்னர் இதேபோலத் திருவெம்பாவை ஓதல் நடைபெறும். நாங்கள் பார்த்தபோது, திருவெம்பாவை ஓதி முடிந்து மாணிக்கவாசகர் உள்ளே செல்லும்போது மழை தூறியது. அன்று மிக வெய்யிலாக இருந்த நாள். அன்றுமாலை நடராஜர் அலங் காரத்துடன் மூலத்தானத்துக்கு எழுந்தருளுவார். பின்னர் எமக்குத் திருவாதிரைக் களி கிடைத்தது.

**திருவாதிரைக் களி:**

சிதம்பரத்தில் சேந்தனார் என்றொரு விறகுவெட்டி இருந்தார். அவர் சிறந்த சிவபக்தர். தினமும் ஒரு சிவனடியாருக்கு உணவளித்து உபசரித்தபின்னரே தான் உணவு அருந்துவார். சேந்தனாரின் பக்தியை உலகுக்குக் காட்டத் தில்லைப்பெருமான் திருவுளங் கொண்டார். திருவாதிரைக்கு முதல்நாள் இரவு கடும் மழை பெய்வித்தார். அடுத்தநாள் விறகுவெட்ட அவரால் போக முடியவில்லை. அதனால் விறகு விற்று அரிசி வாங்கப் பணம் இல்லை. திருவாதிரையன்று சேந்தனாரும் அவர் மனைவியும் இன்று சிவ னடியார் வந்தால் எப்படி உணவளிப்பது என்று சிந்தித்துக் கவலையோடு இருந்தார்கள். அப்போது அவர்களின் வீட்டின் முன் “திருச்சிற்றம்பலம், சம்போ மகாதேவா” என்று ஒரு குரல் கேட்டது. முன்புறம் சென்று கதவைத் திறந்த சேந்தனாரும் மனைவியாரும் அங்கு மழையில் ஒரு சிவனடியார் நிற்பதைக் கண்டார்கள். மகிழ்வுடன் அவரை உள்ளே அழைத்து உபசரித்து ஆசனத்திருத்தி வழிபட்டார்கள். பின்னர் அவருக்கு உணவளிக்க அரிசி இல்லாததால் வீட்டிலிருந்த அரிசி மாவுடன் வெல்லப்பாகைக் கலந்து களி செய்து கொடுத்தனர். சிவனடியாரும் மகிழ்ச்சியாகக் களியை உண்டு மகிழ்வுடன் அவர்களை வாழ்த்தி, தான் எடுத்துச் செல்லவும் கொஞ்சம் களி கொடுக்கும்படி கேட்டு எடுத்துச் சென்றார்.

மறுநாட் காலை அந்தணர்கள் கோயிலைத் திறந்தபோது சிதம்பரம் கருவறையில் களி நிலத்தில் சிதறியிருந்தது. அரசனுக்குத் தகவல் அறிவிக்கப்பட்டது. அதற்குப் பொறுப்

பானவரைக் கண்டுபிடித்து தண்டிக்க அரசன் ஆணையிட்டான்.

சேந்தனார் நடராஜரின் தேர் உற்சவத்துக்குச் சென்றார். அங்கே மக்கள் கூடி வடம்பிடித்து தேரை இழுக்க அது அசைய மறுத்தது. அரசன் சேர்ந்து இழுத்தும் தேர் அசையவில்லை. அப்போது ஓர் அசரீரி கேட்டது. "சேந்தனார்! நீ பல்லாண்டு பாடு!" என்ற அசரீரி கேட்டு சேந்தனார் "மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்" என்று தொடங்கி, "பல்லாண்டு கூறுதுமே" என்று திருப்பல்லாண்டு பாடினார். தேரும் நகர்ந்தது. அரசன் உட்பட அனைவரும் சேந்தனாரைப் பணிந்து வணங்கினர். இந்த அற்புதம் நடைபெற்றதும் திருவாதிரைக்கு முதல் நாளாகும்.

"களி" என்றால் ஆனந்தம். கனகசபையில் ஆனந்த நடனமாடும் நடராஜப்பெருமானுக்கு "களி" நிவேதனம் செய்வது சாலப் பொருத்தமே!

**திருவாதவூர் கோயில்:**

மாணிக்கவாசகர் இருந்த உத்தரகோச மங்கையைத் தரிசித்த பின்னர் அவர் அவதரித்த இடத்திலுள்ள திருவாதவூர் கோயிலுக்கு நேரே சென்றோம். ஆலயத்தை மூன்று மணிபோல் அடைந்தோம். நாலு மணிக்குத் திறக்கப்படும் என்றனர்.

மூலவர்: திருமறைநாதர்
இறைவி: திருமறைநாயகி
தலவிருட்சம் மகிழ்
தீர்த்தம்: பைரவதீர்த்தம்.

மாணிக்கவாசகர் அவதரித்த இடம் இக்கோயிலிலிருந்து 400 மீட்டர் தொலைவில் உள்ளது. சங்கத் தமிழ் ஊரெனக் கல்வெட்டுக்களின் மூலம் சிறப்புப் பெற்ற வாதவூரில் இத்தலம் உள்ளது. ஆயிரம் வருடப் பழைமை பெற்ற இத்தலம் மதுரையில், வைகை நதியின் வடபகுதியில் இருக்கிறது.
கோயில் முன்னால் ஓர் அர்ச்சனைப் பொருள்கள் விற்கும் கடை உண்டு. அர்ச்சனைத் தட்டு ஒன்று வாங்கினோம். மாற்றச் சில்லறைக் காசில்லை. ஏழ்மைநிலை தெரிந்தது. இரு கடலை விற்கும் பெண்மணிகள் கோயில் முன்னால் இருந்தனர். ஒரே அமைதி - அமைதி!

சரியாக நாலுமணிக்குக் கோயில் திறக்கப்பட்டது. ஐந்து நிலைகொண்ட கோபுரம். கோபுர தரிசனம் செய்தோம். உள்ளே சென்றோம். இரு பிரகாரங்களைக் கொண்ட கோயில் எம்மிருவரைத் தவிர வேறு ஒருவரும் அங்கில்லை. சிவாசாரியார் அவசர ஆர்ப்பாட்டம் இன்றி பக்திபூர்வமாக அர்ச்சனை செய்தார். பின்னர் அவருடன் அம்பாள் கோயிலுக்குச் சென்றோம். அங்கும் பூசை செய்தார். தட்சணையாகச் சிறு தொகைதான் கொடுத்தோம். அவர் அம்பாளுக்கு அணிவித்திருந்த மாலையை என்கழுத்தில் அணிந்தார். என்னால் நம்பமுடிவில்லை!

வெளியே வந்தபோது எமது இனத்தவர் எம்மைக் கைவிடவில்லை. ஓடி வந்தனர். உடனே வாழைப்பழத்தைக் கொடுத்தோம். சிலர் பெற்றனர். வேறு சிலர் கைப்பந்தாட்டத்தில் "லபக்" எனப் பந்து பிடிப்பதுபோல் பழத்தை ஏற்றுப் புசித்தனர். அவர்கள்தான் அங்குள்ள சிறு குரங்குகளாகும்.

இத்தலத்தில் உள்ள சிவலிங்கம் சுயம்பு லிங்கமாகும். லிங்கத்தின் மேற் பாகத்தில் பசுவின் குளம்படி உள்ளது. சனீச்சர பகவானுக்கு வாதநோயை இறைவன் நீக்கிய தால் கை, கால் முடம், பக்கவாதம், வாதநோய் உள்ளோர் இங்கு வந்து தரிசித்துப் பயனடை கின்றனர். சனிபகவானுக்கு இங்கு தனிச் சந்நிதி இருக்கிறது. அவர் ஒருகாலை மடக்கி அமர்ந்துள்ளார்.

வயிரவருக்கு வாகனமாகிய நாய் கிடையாது. கையில் சூலமும் இல்லை. இத்தலத்தில் சிவன் வேதத்தின் வடிவில் அருள்பாலிப்பதால் வேதத்தின் வடிவமான நாய் இல்லை. இதனால் வாகனங்களை தொலைத்தவர்கள் வயிரவரை வேண்டி, தீபமேற்றி வழிபட்டுப் பயன் பெறுகின்றனர்.

விநாயகர் யானை வாகனத்துடன் காட்சியளிக்கிறார். மாணிக்க வாசகருக்கு கோயில் உண்டு. சிவபெருமான் இவருக்கு சிலம்பொலி கேட்பிக்கச் செய்த இடமாகும்.

கோயில் காலை 6 மணி முதல் 11 மணி-வரையும், மாலை 4 மணிமுதல் இரவு 8 மணி-வரையும் திறந்திருக்கும். வைகாசி மாதத்தில் பத்து நாள்கள் திருவிழா நடைபெறும். ஆவணி மாத மூல உற்சவத்தில் மாணிக்கவாசகர் குதிரை வாகனத்தில் ஆரோகணித்து அம்பு போடுதல் நடைபெறுகிறது.





# நீத்தல் விண்ணப்பம்

கடையவ னேனைக் கருணையி னாற்கலந்
தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல்
வேங்கையின் தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பி ரான்என்னைத்
தாங்கிக் கொள்ளே

ஏசினும் யான்உன்னை ஏத்தினும் என்பிழைக்
கேகுழைந்து
வேசறு வேனை விடுதிகண் டாய்செம்
பவளவெற்பின்
தேசுடை யாய்என்னை ஆளுடை யாய்சிற்
றுயிர்க்கிரங்கிக்
காய்சின ஆலமுண் டாய்அமு துண்ணக்
கடையவனே

# பிழை திருத்தம்

கலசம் 96ஆவது இதழில், கடைசிப் பக்கத்தில் பிரசுரமான கட்டுரையில் இடம்பெற்ற விடயங்களி யாவும் விவேக சிந்தாமணியில் இருந்து எடுக்கப்பெற்றவை. தவறுதலாக சீவக சிந்தாமணி எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. தவறுக்கு வருந்துகிறோம்.

**ஆசிரியர் குழு**

# உருகாதோர் உளரோ?

-திருமதி அமிர்தா தியாகலிங்கம்-

நந்தி தேவர் மனிதராக, மாணிக்கவாசகராகத் தோன்றித் திருவாசகம் திருக்கோவையார் ஆகியவற்றை அருள, இறைவன் அவற்றை எழுதிக் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது திருவாசகம் மீண்டும் பிறப்பில்லாத முக்தியை கொடுக்கும். மாணிக்கவாசகர் பிறந்து வாழ்ந்த காலமும், குறித்த சில பாடல்கள் பாடிய தலங்களும், குறித்த சில வேறுபாடான கருத்துக்களும் பற்றிய சர்ச்சைகள் இருக்கின்றன. இக்கட்டுரையைத் தெரிந்த வரை கிடைத்த தகவல்களைக் கொண்டு வரைகிறேன். பிழைகளைத் தவிர்த்து, பிசகின்மையானவற்றை ஏற்றுப் படிக்கவும்.

மாணிக்கவாசகர் அருளிய திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாந் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளன. இங்கு திருவாசகத்தில் வரும் சிவபுராணம் முதல் போற்றித் திருவகவல் வரையிலான நான்கு நெடும் பாடல்களும் பின் முறையே திருச்சதகம் 100 பாடல்கள் நீத்தல் விண்ணப்பம் 50 பாடல்களும் திருவெம்பாவை முதல் திருவுந்தியார் வரை உள்ள எட்டும் 20 பாடல்கள் கொண்டதாகவும் மற்ற பகுதிகள்(37உம்) எல்லாம் இரண்டு முதல் பன்னிரண்டு பாடல்களைக் கொண்டதாகவும் உள்ளன.

9ஆம் நூற்றாண்டில் அவதரித்த மாணிக்கவாசகர் இறை அன்பு பற்றுதல் மிகுதியால் இறைவன் மீது தேனினும் இனிய பாடல்களையும் பதிகங்களையும் பாடினார். 8ஆம் திருமுறையில் உள்ள திருவாசகம் சிவபுராணம் முதல் அச்சோப்பதிகம் வரை 51 தலைப்புகளில் 658 பாடல்களை கொண்டது. சிவபுராணம் நமசிவாய என ஐந்தெழுத்தில் தொடங்கி முதல் ஆறு(6) வரிகள் வாழ்க என்றும், அடுத்த ஐந்து(5) வரிகள் வெல்க என்றும், அதன் பின்வரும் எட்டு(8) வரிகள் போற்றி என்றும் வருகின்றன. இது திருவாசகம் 658 பாடல்களைக் கொண்டது என்பதைக் குறிக்கும் என்பர். ஆனால் அச்சோப்பதிகத்தில் 12 பாடல்கள் உள்ளதாகக் கருதுவோர் மொத்தம் 661 பாடல்கள் கொண்டதாகக் கூறுவர்.

மணிவாசகரின் முதல் நான்கு பெரும் பாடல்களில் முதலாவதும் திருவாசகத்தில் தொடக்கமானதாகவும் உள்ள சிவபுரா ணத்தை "மாயப் பிறப்பறுக்கும் மன்னன், அவன் அருளாலே அவன் தாழ் வணங்கி, சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்" என்று கூறப்படுகிறது. சிவபுராணம் கோயில்களிலும் சைவ மதத்தினரின் மங்கல அமங்கல நிகழ்ச்சி களிலும் பாடப்படுகிறது. 32ஆம் வரியில் "மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்" என்று கூறியதால், தான் சிறுவயதில் முக்தி அடையப் போவதை மறைமுகமாகக் கூறியுள்ளார் எனக் கருத வேண்டியுள்ளது.

உயிரையும் ஊனையும் உருக்கும் திருவாசகம் சிவனின் மீது பக்தியைக் கொடுத்து எம்மை பரவசநிலைக்கு இட்டுச் செல்கிறது. பாடல்கள் சிவனின் அன்பையும் அருளையும் பெறவும் பக்தியைப் பெருக்கிச் சிவனின் அருளில் கலந்து கரைந்து இறைவனை நினைத்து உருகி அவனைக் காண வழி சொல்கிறது. மாணிவாசகர் திருவாசகத்தைச் சிவனின்மீது பாடியதால் வாதவூரரைச் சிவன் மாணிக்கவாசகர் என அழைத்தார். இவர் அருளிய இன்னொரு பாவையர் பாடலான திருவெம்பாவை கன்னிகள் மார்கழி மாதம் காலையில் எழுந்து நீராடி இறைவனைத் துயில் எழுப்பி, காதலித்து பாடி களிப்பதாகும். இப்பாடல்களை தமிழ் சைவர்கள் வாழும் எல்லா நாடுகளிலும் உள்ள எல்லாச் சைவத் திருக்கோயில்களிலும் பத்துத் தினங்கள் நடராசர் மீது மாணிக்கவாசகர் முன்னிலையில் இசையுடன் பாடி அடியார்கள்

இன்புறுவார்கள். திருப்பள்ளியெழுச்சி பாடிய பின் திருவெம்பாவை பாடுவார்கள். திருவெம்பாவைப் பாடல்களை அக்கினித் தலமான திருவண்ணாமலையில் பாடியதாக சொல்லப்படுகிறது. இங்கு நான்முகனும் திருமாலும் கொண்ட ஆணவச் செருக்கை அடக்கத் தன் அடி முடியைக் கண்டு வரும்படி சிவன் கூறியதும், திருமால் பன்றி வடிவெடுத்து திருவடியையும் நான்முகன் அன்னப்பட்சியாக முடியையும் காணச் சென்று தோல்வியுடன் திரும்பினர். இதை 'மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம் போலறிவோ மென்றுள்ள பொக்கங்களே பேசும்' என மாணிக்கவாசகர் பாடுகிறார்.

பிடித்த பத்து பாடல்கள் எல்லாம் அருமையிலும் அருமை. இங்கு ஒரு பாடலில் 'அம்மையே அப்பா ஒப்பிலாமணியே' என்றும் 'பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையனேன் றனக்குச் செம்மையே யாய சிவபதம் அளித்த செல்வமே சிவபெருமானே!' என்றும் இன்னொரு பாடலில் 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ!' என்றும் விளித்துவிட்டு, 'உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவ தினியே' என்று கேள்வி கேட்கிறார். 'எனக்குச் செம்மையே ஆய சிவபதம் அல்லவா அளித்து விட்டாய்!' என்று கூறிப் புளகாங்கிதமடைகிறார்.

மாணிக்கவாசகர் அழுதும் தொழுதும் சிவனிடம் தன் சிறுமையையும் இயலாமையையும் எடுத்தியம்பி அதனை விட்டு விடாமல் தாங்கிக் கொள்ளென்று உத்தரகோசமங்கை திருத் தலத்தில் பாடிய ஐம்பது நீத்தல் விண்ணப்பம் பாடல்களிலும் வேண்டுகிறார். சிவனைப் பணிந்து பாடிவந்த மணிவாசகர் பின்பு துணிந்து தோழமை உரிமையுடன் 49ஆம் 50ஆம் பாடல்களில் தன்னைக் கைவிட்டால் நான் உன்னைப் பித்தன் என்றும் என்னைச் சேர்த்துப் பின் புறக்கணித்தவர் என்றும் உமது உடையையும் கோலத்தையும் இடுகாட்டில் இருப்பதையும் ஊருக்குச் சொல்லி பழி சுமத்துவேன் என மிரட்டுகிறார். முதல் இருபது பாடல்களும் இறைவனின் திருக்காட்சி யின்போதும் மிகுதி முப்பது பாடல்களும் இறைவனின் திருக்காட்சி முடிந்த பின்பும் பாடியதாக அறியக் கிடக்கின்றது.

பெண்கள் ஊஞ்சலில் ஆடும்போது பாடத் திருப்பொன்னூசல், பூக்கள் கொய்யும்போது பாடத் திருப்பூவல்லி, காய்களை எறிந்து பிடித்து விளையாடும்போது பாடத் திருவம் மானை. சுண்ணம் என்று மூலிகைகள், பொடி களை இடிக்கும்போது பாடத் திருப்பொற் சுண்ணம் பாடியருளினார். இதில் பொற் சுண்ணம் ஆன்மாக்கள் பெருவாழ்வும் வீடுபேறும் பெற அந்திமக்கிரியைகளில் சுண்ணம் இடிக்கும் போது பாடப்பெறுகிறுது.

குருந்த மரத்தடியில் சிவனிடம் உபதேசமும் தீட்சையும் பெற்ற மணிவாசகர்,

**தந்தது உன்தன்னை கொண்டது என்தன்னை**
**சங்கரா யார் கொலோ சதுரர்?**
**அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்**
**யாது நீ பெற்றது ஒன்று என்பால்?**
**சிந்தையே கோயில் கொண்ட எம் பெருமான்**
**திருப்பெருந் துறைஉறை சிவனே!**
**எந்தையே ஈசா! உடல் இடம் கொண்டாய்**
**யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே**

என்கிறார்.

சிவனைத் தந்தையும் தாயுமாக பார்க்கும் மணிவாசகர் போற்றித் திருவகவலில் 'தாயே ஆகி வளர்த்தனை போற்றி' என்றும் நீத்தல் விண்ணப்பத்தில் 'என்னை வளர்ப்பவனே' என்றும் திருத்தெள்ளேணத்தில் 'தன் கழல் நான் மறவா வண்ணம் நல்கிய அத் திறம்' என்றும் பாடுகிறார்.

திருப்புலம்பலில் அடியேனாகிய நான் உனது திருவடிகளையன்றி வேறு எவற்றையும் புகழமாட்டேன். உன்னையன்றி வேறு உற்ற துணையை அறிந்திலேன் என்றவர் பின்

**உற்றாரை யான் வேண்டேன்**
**ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்**
**கற்றாரை யான் வேண்டேன்**
**கற்பனவும் இனியமையும்**
**குற்றாலத் தமர்ந்துறையும்**
**கூத்தா உன் குரைகழற்கே**
**கற்றாவின் மனம்போலக்**
**கசிந்துருக வேண்டுவனே**

எனப் புலம்புகின்றார்.

திருச்சதகத்தில் வரும் பாடல் ஒன்றில், சிவனை,

**வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி**
**ஊனாகி உயிராகி உண்மையுமாய்**
**இன்மையுமாய்க்**
**கோனாகி யான்எனதென் றவரவரைக் கூத்தாட்டு**
**வானாகி நின்றானை என் சொல்லி**
**வாழ்த்துவனே**

என ஏங்குகிறார்.

அடைக்கலப்பத்தில் உள்ள எல்லாப் பாடல்களிலும் அடியேன் உன் அடைக்கலமே என சிவனிடம் கூறுகிறார்.

பிறநாட்டு அறிஞர்கள் பலர் திருவாசகத்தைப் படித்துப் பரவசமடைந்து தங்கள் தங்கள் மொழிகளில் மொழிபெயர்த்துள்ளார்கள். இவர்களில் தமிழர்களுக்கு மிகவும் அறிமுக மானவரும் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவருமான ஜி.யு.போப், மாணிக்க வாசகரைப்பற்றிக் குறிப்பிடும்போது, உலக வரலாற்றிலேயே மேதையான இவரைவிடப் புலமை, உழைப்பு, துன்பத்தைப் பொறுத்தல், இடையறா நிலைத்த பக்தி ஆகிய பண்புகளுடன் நம் மனத்தைக கவர்கின்றவர் வேறு யாரும் இல்லை என்கிறார். திருவாசகத்தின் அருமையை அறியாத தழிழர் இருந்தென்ன பயன் எனத் தனிநாயக அடிக ளார் கூறியுள்ளர்கள்.

# நெதர்லாந்து ஸ்ரீவரதராஜ செல்வவிநாயகர் கோயில்

## திருமதி விமலாதேவி சிவநேசன்

நீர்வளமும் நிலவளமும் நிறைந்திருக்க மலர் களால் அழகுசெய்யும் நெதர்லாந்து நாட்டினிலே வடபால் டென்கெல்டர் பதியினிலே வேண்டுவார்க்கு வேண்டுவதை வாரிவழங்கும் அருள்மிகு ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகர் ஆலயத்தில் ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் தைப்பூசத்திருவிழா இவ்வாண்டும் *08 02 2020* சனிக்கிழமை மாலை மிக விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. அன்றைய உபயத்தைத் திரு கந்தசாமி குடும்பத்தினர் ஆண்டுதோறும் செய்வதுபோல் அன்றும் மிகவும் பக்திசிரத்தை யோடு தர்ப்பையணிந்து பங்கேற்க, அன்றைய பூசை வழிபாடுகளை ஆலய பிரதம குருக்களாகப் பணியாற்றும் சிவாகமபாஸ்கர சிவஸ்ரீ தத்புருஷகணேச சிவாசாரியார் அவர்களும் சிவாகமபாஸ்கர சிவஸ்ரீ வாம தேவப்ரபு சிவாசாரியார் அவர்களும் முறைப்படி மிகச்சிறப்பாக நடாத்தினர். அன்றுமாலை ஐந்து மணியளவில் விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட கிரியைகள், மூலமூர்த்தியான விநாயகப் பெருமானுக்கும் முருகப் பெருமானுக்கும் நவகலச பூசைகள் செய்யப்பட்டு, மகாகணபதியாகமும் ஸ்கந்த யாகமும்செய்யப்பட்டு, சிறப்புத் திரவிய அபிஷேகங்களும், பால் தயிர், பஞ்சாமிர்த அபிஷேகங்களுடன் கலசாபிஷேகமும் நடை பெற்றன. பரிவார மூர்த்திகளுக்குப் பால் அபிஷேகம் செய்யப்பட்டது.

பக்தர்களின் கூட்டுப் பிரார்த்தனையைத் தொடர்ந்து மூலவரான ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகப் பெருமானுக்கும் தொடர்ந்து சிவலிங்க வடிவாகக் காட்சி தரும் சொக்க நாதப்பெருமானுக்கும், பார்வதிதேவிக்கும் வள்ளி,தெய்வானை உடனுறை முருகப் பெருமானுக்கும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் பூசைகள் நடைபெற்றன. அன்று தைப்பூசத்திருநாள் என்றதால், விநா

யகப்பெருமானுக்கும் முருகப்பெருமானுக்கும் சந்தனக்காப்புச் சாத்தப்பட்டு இருந்ததோடு முருகப்பெருமானுக்கு மாவிளக்கேற்றித் திருப்புகழ் பாடிச் சிவாசாரியர்களால் விசேஷ பூசை வழிபாடுகள் செய்யப்பெற்றன.

இவ்வமையம் நாம் இவ்வாலயத்தின் வரலாறையும் எண்ணிப்பார்ப்பது சிறப்பாக அமையும். இலங்கையில் செந்நீராறு ஓடியபோது திசை தெரியாது ஓடிவந்த தமிழ் மக்களால் இந்த ஆலயம் ஆரம்பிக்கப்பட்டது. முதலில் அவர்கள் தங்கள் மனஅமைதிக்காகக் கூட்டுப்பிரார்த்தனை செய்த இடம் சென் நிக்கொலஸ் தேவாலயத்தின் குருவானவர் விடுதியின் சிறிய அறை ஒன்றுதான். அதன்பின்னர் பல சிரமங்களின் மத்தியில், இலண்டனிலிருந்து தருவித்த சிறிய விநாயகப் பெருமான் விக்கிரகத்துக்கு *29.03.1991* பிரசோற்பதி வருடம் பங்குனிமாதம் உத்தர நட்சத்திரம் கூடிய வெள்ளிக் கிழமையன்று நெதர்லாந்தில் வாழ்ந்த மக்கள் அனைவரும் ஒன்றுகூடிச் சைவசமய விதிகளுக்கமைய, குருமார்களினால் கும்பாபிஷேகம் செய்வித்து, காலங்கள் கடந்தும் காத்தருளவல்ல, வினைகளை நீக்கி நலம்நல்கும் விநாயகருக்கு, ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகர் என்ற நாமம் சூட்டி வழிபடலானார்கள்.

அதனைத்தொடர்ந்து Elzen straat 36 என்ற பழைய பாடசாலைக் கட்டடம் தெரிவு செய்யப்பட்டு *17.08.1992* அன்று கிருகப்பிரவேசமும் *11.09.1992* வெள்ளிக்கிழமையன்று மிகச்சிறப்பான முறையில் கும்பாபிஷேகமும் நடைபெற்றன.

*22.03.1997*ஆம் ஆண்டு ஞாயிற்றுக்கிழமை பங்குனி உத்தரநட்சத்திரத்தில் மீண்டும் மூலமூர்த்திக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் ஆகமமுறைப்படி மிகுந்த ஆசாரத்துடன் நடைபெற்றது. இவ்வாலயத்தில் நித்தியபூசைகளோடு விசேடமான நாள்களிலும் விரதகாலத்திலும் விசேட பூசைகள் நடைபெற்று வந்தன. நாளுக்கு நாள் மூர்த்தியின் அநுக்கிரகம் பெருகிவர, விநாயகப் பெருமானை நாடிவந்து வழிபடும் அடியவர்களும் பெருகிவரலானார்கள். விக்கினங்களை நீக்கவல்ல விநாயகப்பெருமான் தன் அருள் பெருகுவதுபோல் ஆலயமும் வளர்ச்சிபெறத் திருவுளங்கொண்டார். அவ்வமையம் அரசின் நகரின் புனர்நிர்மாணத் திட்டத்தின்கீழ், எமது ஆலயக் கட்டடத்தை விட்டு வெளியேறவேண்டிய நிலைமை ஏற்பட்டது. பல சிரமங்கள் மத்தியிலும் பக்தியோடு நிதி திரட்டி, அரசிடமிருந்து விநாயகப் பெருமான் கோயில் அமைப்பதற்கு உகந்த நிலம் *01.09.2000* ஆவணிச் சதுர்த்தியன்று கொள்வனவு செய்யப்பட்டது. நிலம் கொள்வனவு செய்வதற்கும் அதனைத் தொடர்ந்து ஆலயம் அமைப்பதற்கும் தேவைப்பட்ட நிதியை இங்குவாழ் தமிழ் மக்களோடு, இலண்டன், பிரான்ஸ் ஜேர்மன் நாட்டு மக்களும் கொடுத்துப் பெரும் புண்ணியத்தைச் செய்திருந்தார்கள். இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கம், Tooting முத்துமாரியம்மன் ஆலயம் London சைவ மாநாட்டில் இணைந்துள்ள ஏனைய ஆலயங்கள், கம் காமாட்சியம்பாள் ஆலயம் போன்றன இவ்வாலயத்துக்குச் செய்த திருப்பணிகள் மிகவும் அளப்பரியதாகும். புதிதாக வாங்கிய பூமியில் *22.08.2001*அன்று எம்பெருமான் ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகருக்குக் காலத்தால் அழியாத ஆகம விதிகளுக்கு அமைவான ஆலயம் அமைப்பதற்கான பூமிபூசை நடைபெற்றது

மங்களகரமான சுபானு வருடம் ஆனித்திங்கள் *22*ம் நாள் *06.07.2003* ஞாயிற்றுக்கிழமை சப்தமி திதியும் உத்தர நட்சத்திரமும் கன்னி இராசியும் கூடிய ஆனிஉத்தர நன்னாளில் விநாயகப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் அநாவர்த்தன பிரதிஷ்டா நூதன பஞ்சகுண்டயாக மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து இதுநாள் வரையும் அலங்காரஉற்சவமாக இருந்த வருடாந்த உற்சவம் கொடியேற்றத்துடன் கூடிய மகோற்சவமாக மாறியது. *2011*ஆம் ஆண்டு இராஜ கோபுரப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு விஜய வருடம் ஆவணிமாதம் *31*ஆம் நாள்

*16.09.2013* திங்கட்கிழமையன்று பார்த்தவர்கள் பார்த்தவிழி மூட மறந்து வியந்திருக்கும் வண்ணம் விண்ணைத் தொட உயர்ந்த பஞ்சவர்ண இராஜகோபுரத்துடனான, ஐரோப் பியர்களும் அழகுப்பொக்கிஷம் இதுவென்று பாராட்டிமகிழ்ந்த ஆலயத்தில், ஸ்ரீ மீனாட்சி உடனுறை சொக்கநாதப் பெருமான், விநாய கப்பெருமானுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் பஞ்சகுண்ட மகாயாக கும்பாபிஷேகம் நடை பெற்றது. ஆலயம் வளர்ந்ததற்கு மேலாக எம்பெருமானின் திருவருள் அதிஅற்புதமாக வளர்ந்து அடியார்களை மகிழ்விக்கிறது.

மீண்டும் நாங்கள் தைப்பூசத்திருவிழாவிற்கு செல்வோம் வசந்தமண்டபப் பூசைகளைத் தொடர்ந்து அன்று இலங்கையிலிருந்து வருகை புரிந்த ஆசிரியர் தமிழருவி திரு சிவகுமார் அவர்களின் சொற்பொழிவு நடைபெற்றது. அவ்வமையம் ஆலயத்தின் சார்பில், திரு சந்திரநாதன் அவர்களும் திரு இரவீந்திரன் அவர்களும் திரு சிவகுமாரன் அவர்களுக்கு மாலை, பொன்னாடை அணிவித்துக் கௌரவித்தனர். அறிமுக உரையை ஆற்றிய திரு சிவநேசன் அவர்கள் தனது உரையின் போது தமிழருவி திரு சிவகுமார் அவர்கள் எமது ஆலயத்துக்குப் பலதடவைகள் வந்திருக்கின்றார் என்றாலும் எமது இவ்வாலயம் முழுமை பெற்றபின்னர் இன்று வந்திருக்கும் இவர் நெதர்லாந்து மண்ணில் கால்கள் படாமலே எமது ஆலயம் அமைப்பதற்காக இலன்டனில் நின்றுகொண்டு சைவமாநாட்டு விழாவின் போது சிவத்தொண்டு என்ற தலைப்பில் உரையாற்றுகையில் எமது ஆலயம் அமைவதற்கு உதவி செய்யவேண்டும் என்பதனை வலியுறுத்தி உரையாற்றி யிருந்ததனை நினைவுகூர்கையில் அனைத்துப் பக்தர்களும் மகிழ்வோடு கைதட்டி ஆரவாரித்தனர். மேலும் திரு சிவநேசன் அவர்கள் உரையாற்றுகையில் அன்று நாங்கள் இளம் வாலிபர்களாக இருந்ததால் எங்களைப் பார்த்த சிலருக்கு எங்கள் மீது நம்பிக்கை இல்லாதிருந்தது உண்மைதான். ஆனாலும் எங்களுக்காகக் குரல்கொடுத்த தமிழருவி திரு சிவகுமார் அவர்கள் இன்று எமது முழுமைபெற்ற ஆலயத்துக்கு வந்திருப்பது அவர் எங்கள்மீது கொண்ட நம்பிக்கையைக் கண்கூடாகக் காண்பதற்கு வாய்பாகவும் அமைந்துள்ளது என்பதையும் மகிழ்வோடு கூறினார்.

தமிழருவி திரு சிவகுமார் அவர்கள் "தைப்பூச நந்நாளின் சிறப்பு" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றியிருந்தார். ஆனால், தனது சொற்பொழிவின் பாதிநேரத்துக்கு மேலாக இவ்வாலயத்தோடு தனக்கிருந்த தொடர்பையும் ஆலயத்தின் சிறப்பையும் விளக்கினார். எமது ஆலயம் பழைய இடத்தில் இருந்தபோது இரண்டு தடவைகள் தொடர் சொற்பொழிவு ஆற்றியதாகவும், இந்த ஆலயத்தின் பூமி பூசையின் போது இலண்டன் முத்துமாரியம்மன் ஆலய ஸ்தாபகர் திரு சீவரத்தினம் ஐயா வோடும் இந்தியாவிலிருந்து வருகை புரிந்த பேராசிரியர் திரு அருணை பாலறவாயர் அவர்களோடும் இவ்வாலயத்துக்காக அடிக்கல் நாட்டிய அந்த நாள் திகதி நேரம் என்பனவற்றைச் சரியாக நினைவு கூர்ந்ததோடு இன்று, தான் இந்த ஆலயத்தைக் கண்டபோது தனது மனம் அடைந்த ஆனந்தத்தையும் பலவாறு சொல்லி மகிழ்ச்சிபொங்கப் பாராட்டி யிருந்தார் மேலும் இலண்டன் ஐரோப்பாவில் முழுமைபெற்ற நான்கு ஆலயங்களில் ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகர் ஆலயமும் இடம்பெறுவதாகவும் கூறியதோடு எமது ஆலயத்தையும் உள்வாங்கி தான் எழுதிய கட்டுரை பல்கலைக்கழக மாணவர்களின் பாடத்திட்டத்தில் இடம்பெற்றதாகவும் கூற அனைவரும் அதனை மகிழ்வோடு வரவேற்றனர். இன்றைய தைப்பூசநாளின் சிறப்பு என்னவென்றால், இன்றுதான் சிவன் பார்வதிதேவியோடு நடனமாடி மகிழ்ந்த நாள் என்றும் சிதம்பரத்திலே பார்வதி தேவியோடு பரமசிவனும் நடனமாடிய காட்சியினைத் "தத்துவமாடச் சடாசரன் தானாட" என்ற திருமந்திரத்திலே அழகாகக் கூறியுள்ளதைக் கூறினார்.

தொடர்ந்து, இந்நாள் சிவனுக்கும் முருகப் பெருமானுக்கும் மிகவும் சிறப்பான நாள் என்றும்,

**தொடர்ச்சி 29ஆம் பக்கம்**

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

# விசேட நாள்கள்

**ஜனவரி (14-01-2021) தொடக்கம் ஏப்பிரல் (26-04-2021) வரை**

| | | |
|---|---|---|
| *14.01.2021* | வியாழன் | தைப்பொங்கல் |
| *18.01.2021* | திங்கள் | ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் கும்பாபிஷேகதினம். |
| *28.01.2021* | வியாழன் | தைப்பூசம் |
| *31.01.2021* | ஞாயிறு | ஸ்ரீஏகாதச ருத்ர ஹோமம் |
| *25.02.2021* | வியாழன் | நடேசர் அபிஷேகம் |
| *11.03.2021* | வியாழன் | மகாசிவராத்திரி |
| *25.03.2021* | வியாழன் | யோகர் சுவாமிகள் குருபூசை |
| *28.03.2021* | ஞாயிறு | பங்குனி உத்தரம் |
| *30.03.2021* | செவ்வாய் | காரைக்கால் அம்மையார் குருபூசை |
| *12.04.2021* | திங்கள் | வசந்த நவராத்திரி ஆரம்பம் |
| *14.04.2021* | புதன் | சார்வரி வருஷப்பிறப்பு |
| *26.04.2021* | திங்கள் | சித்திரைப் பூரணை |

**கோயில் திறந்திருக்கும் நேரம்:**

**காலை: 8.30 மணிமுதல் 13.00 மணிவரை**
**மாலை: 5.00 மணிமுதல் 9.00 மணிவரை**

அன்பர்கள் அனைவரும் வந்து, ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானை வழிபட்டுத், திருவருள் பெற்று உய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

# Saiva Munnetta Sangam (UK)

*"Community Service Through Saiva (Hindu) Concern"*

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.

Tel : 020 8514 4732    Fax: 01268 561805

**www.saivamunnettasangam.com    smsukinfo@gmail.com**


**Registered Charity No: 292085**

## MEMBERSHIP FORM

| | | | | |
|---|---|---|---|---|
| Title | | Home Phone | | |
| First Name | | Mobile No | | |
| Surname | | Email ID | | |
| Address | | Membership | ☐ Annual £15.00 | ☐ Life £150 |
| Town<br>Post code | | For online payments to Saiva Munnetta Sangam (UK)<br>Lloyds Bank A/c Number : 00373079<br>Sort Code : 30-90-80 | | |

I wish to become a member of the Saiva Munnetta Sangam (UK) and enclose herewith cash/ cheque / made online payme
for £ ............................ Members are entitled to receive our information emails, Thoranam and Kalasam quarterly magazin

| Date | Signature of the Applicant |
|---|---|

giftaid it

*Use Gift Aid and you can make your donation worth more. For every pound you give to us, we get an extra 0.25 pence from Inland Revenue, helping your donation go further with no extra cost to you. This means tha £15.00 donation can be turned into £18.75 and £150.00 donation can be turned into £187.50 just so long as donations are made through Gift Aid.*

*By ticking (√) the box under the headed 'Gift Aid', I confirm that I am a UK Income or Capital Gains taxpayer. I have read this statement and want Saiva Munnetta Sangam UK to reclaim tax on the donation, given on the date shown. I understand that I must pay an amount of Income Tax and/or Capital Gains Tax in the tax year at least equal to the amount of tax that all the charities and CASC's I donate to, will reclaim on gifts for that tax year. I understand that other taxes such as VAT and Council Tax do not qualify. I understan the charity will reclaim 25p of tax on every £1 that I have given.*

## For Official Use

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Receipt No | | Pay in slip No | | Date Banked | |
| Membership No | | Membership Starts | | Membership Ends | |
| Approved Executive Committee | | | Introduced by | | |

| President | Hon. General Secretary | Membership Secretary |
|---|---|---|

# The Dancer, Divinity

**Geetha Sridhar**

***The author is a bharathanatyam dancer, lecturer, choreographer and the artistic director of Natyasri Dance Company. This is an excerpt from her academic research on Chidambaram temple. References and citations include various books, catalogues, Chidambaram temple website and Wikipedia.***

The most fascinating aspect of a Hindu temple is that it represents a human form. The fundamental function of the human body is to move. As a bharathanatyam dancer I find that the practice of dance, particularly when performed with a religious and ritualistic intent, complements the very idea of the temple structure that corresponds to the 'sukshma sharira', converging the five senses, five elements and the four states of consciousness, that makes one's own body a temple too.

In pursuit of delving into the Dravidian temple architecture of South India, in the sectarian style of a Shaivite temple, I choose the image of the dancing lord, 'Nataraja' as he is postulated at the Chidambaram Temple. At the outset, it is interesting to note that the Lord is consecrated here in three different forms, namely: Roopa, (in his cosmic dance form) Rooparoopa (in the Linga form) and Aroopa (formless).

Chidambaram temple is situated in a small town called Chidambaram, in the Cuddalore district of Tamil Nadu, not far from its capital city of Chennai. The temple is believed to have had mythical roots that are suggestive of ancient and pre-medieval periods. Thillai was the name of the town when the shrine of Shiva is believed to have existed. The historical facts reveal that the Chidambaram temple has had several renovations during the Pallava and Chola dynasties. One



inscribed evidence shows Vikrama Chola (1118-35) invested a year's revenue on the enhancement of the Chidambaram temple with gold and precious stones. The current version of the temple can be dated back to the 10th century. Chidambaram was the capital of the Chola dynasty and Lord Nataraja was considered their tutelary deity. It was the Cholas that renamed the town as Chidambaram.

The name Chidambaram can be deciphered as the Tamil word 'Chittrambalam: Chitt meaning consciousness and ambalam meaning atmosphere or performing stage. This compounded word signifies a belief that one ought to aim to attain the highest consciousness and symbolises the dancing posture of Shiva as synonym to liberation.

The mythological story goes, that Shiva strolling through the Thillai forest (a species of mangrove trees) in the disguise of a

mendicant accompanied by his consort Vishnu, disguised as Mohini (the most beautiful woman) caused a stir among the dwellers of the forest who were a group of saints. The sheer exuberance of Shiva mesmerised the saints, and their wives were utterly captivated by his charm. This provoked the saints to invoke poisonous snakes, summon a tiger and spring upon him a powerful demon (Muyalaka). However, Shiva tackles all of them, by adorning the snakes on his neck, and hair, skins the tiger and clads it around his waist and immobilises the demon by stepping on him thus revealing his form of Nataraja as he performs the Ananda Tandava- the dance of bliss. This was witnessed by sages Patanjali and Vyaghrapada. The saints realize the God's grace and surrender at his fee.

In a spread of over approximately forty acres of land the Chidambaram temple has nine major gopurams or cow gates. The four main gopurams are on the outer circumference of the fortified walls on the four directions of East, West, North and South. These four gopurams have seven storeys and each of them have thirteen kalasas. Each of these storeys are constructed with over forty to fifty sculptures depicting various Hindu stories. These fortified walls were the contributions by Vijayanagara rulers and Nayaka rulers between 14th and 16th centuries as a result of destructions and demolitions. The remaining five gopurams are within the premise of the temple. The temple has three prakarams or courtyards. The space between the third courtyard and the outer wall which is considered as the fourth courtyard maintains a garden and a palm grove. Four of the gopurams are within close proximity to each other on the southwest that include the sanctum. They are situated between the first and the second prakara. The dwaja sthambam (flag mast) is on the second prakara. One gopuram is in the third prakara that is situated towards the northern gopuram that houses a Devi sanctum leading to the Sivagangai water tank. The main entrance to the temple is facing East. The shrines within the temple can be seen through five Sabhas or halls. They are: Chit Sabha, Kanaka sabha, Nritya Sabha, (hall of dance) Raja Sabha (thousand pillared hall) and Deva Sabha (divine gathering hall).

Of these five Sabhas, the two sacred spaces of The Chit Sabha (space of consciousness) and Kanaka sabha form the sanctum sanctorum or the Garba griha of Chidambaram temple. Chit Sabha is constructed inside the first prakara in a square shape of approximately 44 metres. This space (Chit Sabha) is actually empty and it is called the Chidambara Rahasyam, (the secret of Chidambaram) where the lord is formless. This space is covered by a cloth curtain and is only revealed at the end of a poojai ritual. The significance is that it indicates retracting from ignorance and acknowledging the Lord's presence is his form of Aroopa (formless). To the right of this space is the idol of Nataraja with his consort Parvathi. The second prakara that is situated towards the west is also square in shape and measures about 105 metres. This sanctum is the Kanakasabha (dancers gathering space). The Garba griha is roofed in gold with nine kalasas.

'Nataraja enshrined at his home in the golden hall at Chidambara, had assumed the status of tutelary deity (kula-nayakam) to the Chola royal household. This association may have been established as early as the reign of Parantaka I, who, as a devout follower of Shiva first undertook the gilding of Shiva Nataraja's dwelling, the Chit Sabha and thereafter acquired the title of 'the one who covered with gold' (pon veinda perumal)'
A unique feature in this sanctimonious space

is that it also holds a shrine for Govindaraja Perumal a Vaishnavaite God, postulating in his repose of Ananthasayana.This is situated adjacent to the Kanaka sabha. Mythology holds the theory that Lord Shiva beckons to the wish of Adishesha, who serves as a bed to Lord Vishnu to watch the Ananda thandava, hence the presence of the Vaishnava shrine in this space. Both gods, Shiva and Vishnu have their uthsava, or processional ritual too in this temple. The temple gains its honour as a 'paadal petra sthalam' i.e. sung in praise of by some of the sixty-three saints or the Nayanmars. The temple also holds shrines for the Aadhimoolar (the original Shiva lingam) Umai ammal, sixty-three Nayanmars, Goddess Sivagamasundari, Lord Muruga and Lord Ganesha. The sacred number five is apparently associated with various aspects pertinent to this temple. For example, it is one of the five auspicious sthalas (panchabhootha sthala) a place akin to the element of sky. The primary essence of Lord Nataraja is the mantra Na ma si va ya, which are five syllables.

The idol of Nataraja that presides today at the temple shrine is three and a half feet in height and it takes thirty to forty priests to carry it to the pedestal for the abhishekam. The deity is made of pancha laucha, an amalgamation of five metals that include copper, gold, silver, bronze and lead. The Chola dynasty contributed hugely to the sacred bronzes of South India. Bronze casting followed by the Shipa Sasthra and created by the Sthapathi adhering to the required abstinence rites in the process of making the idol was seen as the most revered jobs. History records, around 12th century, invasions by the Muslim armies, required measures to be taken to protect a vast number of the bronzes.

'In 1979 some eighty-seven bronzes, mostly Chola and none later than the early fourteenth century, were discovered concealed in a hidden chamber within the Chidambaram temple itself. This is the largest intact collection of Chola bronzes to have survived from a single temple'.

Coming to the crux of the subject, the image of the Lord's striking dancing posture and its significance are far deeper than a mere decorative pose. The Shivanandha Thandava or the cosmic dance of Shiva is symbolic of creation, preservation and dissolution. It is also a triad of religion, art and science. The image of Nataraja has four arms. The upper right hand holding the damaru or the drum signifies primal creative energy and the lower right hand holding the abhaya hasta signifies blessings and preservation. The upper left hand holds the sacred fire, the fire of sacrifice and the lower left hand holding the dola hasta stretched across the body pointing to the raised left leg signifies benediction to his devotees. The right leg that tramples down the dwarf demon Muyalaka signifies destroying ego and ignorance. On his matted locks of hair, he holds the river Ganges, the crescent moon and a cobra and a skull. He clads the tiger skin, and adorns necklaces armlets, belt, anklets finger and toe rings. Kāla or time forms the frame of the image.

'The dance, in fact, represents His five activities (Pancakritya), viz: Shrishti (overlooking, creation, evolution), Sthiti (preservation, support), Samhara (destruction, evolution), Tirobhava (veiling, embodiment, illusion and also giving rest), Anugraha (release, salvation, grace)'.

Appar, one of the Nayanmars, describes the beauty of the Lord in Chidambaram in his poem (Thevaram of Thirumurai 4.081) that it might even be worth relinquishing the penance for salvation and be born as a

human being just to have another glimpse of Him. The temple is an inescapable display of the interconnectedness between art and spirituality. Amongst many routes to finding salvation in Hindu philosophy, 'bhakthi' through arts such as music and dance were not uncommon even in the vedic times. Though bharathanatyam is practiced as a theatre art today, the very roots of this dance seem to have existed from around 2nd century AD which we know with the evidence of Natyashastra authored by Bharathamuni. Also, it is a well-known fact that these dances were performed as part of temple rituals by Devadasis (temple dancers). Although the practice of Devadasi tradition in the temples is no longer in place today, the role of these dancing women and their contribution to the heritage of bharathanatyam that had once flourished during the Chola, Pandya and Chera dynasties is phenomenal in the Hindu tradition.

'The mystical dance of Shiva seems to have influenced the concept of ritual dance… While the dancing god struck the balance of the cosmos, the temple dancers echoed the symbolism of this celestial dance'.

Sacred scriptures called the Agamas sanctioned dance and dancers in ritual worship. The Kamika Agama is employed in Shiva worship.

'Well trained devadasis were part of this ritual hierarchy….The kamika Agama says, that the dancer who is to be dedicated to a temple should wear her hair in a knot above the collar bone, tie a saffron-coloured cloth around her waist like a priest, and adorn her forehead with three stripes of ash (vibhuthi) like all devout Shaivaites are known to do'.

These dancers were devout, and their activities involved cleaning the temple, lighting lamps and dance holding the lamps at dawn, noon dusk and night. The Devadasis held a revered position in the kingdom. Records show evidence of over 400 dancers being maintained by the temples. Though not much is recorded on the Devadasis of Chidambaram temple, an incident of how a Devadasi called Vaippi of Chidambaram took away the golden idol of Nataraja for safekeeping at her home when the Muslim invader Tipu Sultan's forces threatened to loot the temple affirms their appointment for ritualistic duties at the temple. Another glaring evidence is that of the exquisite sculptures found on the east gopuram of the Chidambaram temple, built during the Kulothunga Chola in the 12th century. It holds the series of 108 karanas of the Natyashastra of which Ninety-three of them are intact and fifteen of them display the wrath of time. The west gopuram built during Vikrama Chola's reign, bear the grantha inscriptions of the appropriate names corresponding to the karanas.

The enormity and immensity of this temple and the breath-taking image of Nataraja, their history, architecture, mythology, affinity to science, religion and culture, are all overwhelming to understand and comprehend. Recent western acknowledgement and revelation that the Chidambaram temple is situated at the centre point of world's magnetic equator adds to the veneration. The greatness of this temple is still savoured and devotees flock to see the Lord particularly during the chariot festival and other eminent festivals.

The dichotomy of 'Tradition versus Modern' ethos may be a debatable topic, but, whether the intent is with the dance form or the devoutness to the lord of dance in Chidambaram temple, an unshakeable belief in either of the two or both, will no doubt ascertain a flourishing future as blissful as the Ananda Thandava!

# இல்லறமே நல்லறம்

## அநுஜா

இல்லறமே இவ்வுலக வாழ்வைச் சிறப்புற இயங்கவைக்கிறது. வாழ்க்கை முறையைப் பக்குவப்படுத்துகிறது. வாழ்வியலைச் செப்பனிடுகிறது; சீராக்குகிறது; சிறப்படையச் செய்கிறது. இல்லறமின்றேல் இயங்காது இவ்வுலகம். இறைவன் இவ்வுலகை அவ்வாறே படைத்திருக்கிறான். (எல்லா உயிர்களின் இனப்பெருக்கத்துக்கும் இதுவே அடிப்படையாகும்) எமது சைவசமயத்தில் இறைவன் சக்தியோடு கூடிச் சிவசக்தியாக உலகை இயக்குகிறான். அர்த்தநாரீசுவரராகக் காட்சி தருகிறான். பொதுவாக எல்லாக் கடவுளுக்கும் சக்தி இருப்பதைக் காணலாம். சிவன், பார்வதி, பிள்ளையார் - முருகருடன் குடும்பமாகக் காட்சி தருகிறார்.

உலகப் பொதுமறையான திருக்குறள் வழிநின்று இனி இல்லறம் எதுவெனப் பார்ப்போம். இல்லறத்தை அறன்வழி நடத்துவதே சிறப்பு என எண்ணிய வள்ளுவர் அறன் வலியுறுத்தல் என்னும் அதிகாரத்தை இல்வாழ்க்கைக்கு முன்பு வைத்துள்ளார். இல்லறத்தானின் வாழ்க்கையை உற்று நோக்கும்போது அவனது பொறுப்பும் கடமையும் அளவற்றவை என்று தெரியும். இல்வாழ்க்கை என்னும் அதிகாரத்தில் முதல் மூன்று குறள்களிலும் ஒரு இல்வாழ்வான் யார் யாருக்கெல்லாம் உதவி செய்கிறான் என்று கூறப்பட்டுள்ளது. துறவிகளுக்கும் பிரம்சாரிகளுக்கும் அவரவர் தேவைகளை இல்வாழ்வான் பூர்த்திசெய்கிறான். அரசன், ஆசான், ஆன்றோர், வறியோர், உற்றார், உறவினர் என்போர்க்கும் அவன் உதவுகிறான். அது மட்டுமன்றி மூதா தையருக்குப் பிதுர்க்கடனும் செய்கிறான். கோயிலிலே திருப்பணிகள் செய்து ஆலய வழிபாடு சிறக்க உதவுகிறான். இவ்வாறு பல வழிகளிலும் சமுகத்துக்கு தன் பங்களிப்பை அளிக்கிறான். நான்காவது குறளில் இவ்வாறு பிறர்க்கு உதவுவதற்கு தேவையான பொருளைச் சேமிக்கும்போது பழிபாவங்களுக்குள் உட்படாது நல்வழியில் நின்று சம்பாதிப்பதே இல்வாழ்க்கைக்குச் சிறப்பென்கிறார் வள்ளுவர். பழிக்கு அஞ்சி நடத்தலும் பகுத்துண்ணலும் வாழ்வில் மேல்நிலை அடைய உதவும் என்பதே கருத்தாகும்.

ஐந்தாவது குறள் இல்வாழ்க்கை எது என்பதற்கு வரைவு இலக்கணம் (definition) கூறுவதுபோல உள்ளது.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது　　　　　　　　*குறள் 45*

ஒரு சிறந்த இல்வாழ்க்கைக்கு அன்புதான் ஆணிவேர். தன்னலமற்ற அன்பு இருந்தால் மற்றைய எல்லா நற்குணங்களும் தானாகவே வந்துவிடும். முக்கியமாகப் புரிந்துணர்வு, விட்டுக்கொடுத்தல், அநுசரித்துப் போதல் யாவுமே வந்துவிடும். அன்பு இருந்தால் இரக்கம், கருணை வரும். இது இல்லறத்தை அறவழியிற் கொண்டுசெல்லும்.

There will be grace and gift if family life is rooted in love and virtue

ஆறாவது குறளில் ஒருவன் இல்வாழ்க்கையை அறத்தின் வழியே நின்று நடத்துவனாயின் அதற்குப் புறமாகிய நெறியில் (துறவறத்தில்) நின்று அடையக்கூடிய பயன் என்ன? என்று ஒரு கேள்வியை எழுப்புகிறார். சிறந்த இல்லறமே பிறந்த பயனை முழுமையடையச் செய்யப்போதுமானது என்று கருத்தாகும்.

ஏழாவது குறளிலும் இல்லறத்தின் மேன்னை மேலும் வலியுறுத்தப்படுகிறது.

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை குறள் 47

இல்வாழ்க்கையை மனைவியுடன் உரிய முறைப்படி வாழ்பவன் ஐம்புலன்களை அடக்கித் தவம் செய்து கடவுளை அடைய முயற்சிக்கும் துறவிகளைவிட மேலானவன்.

One who leads a vertuous domestic life is the greatest among all trying for superior state

எட்டாவது குறளில் துறவறத்தார் துறவறத்தைப் பின்பற்றுவதற்கு உறுதுணையாக நிற்பதுடன் தானும் அறவழிநின்று இல்லறத்தை நடத்துவனாயின் அவனுடைய இல்வாழ்க்கை தவஞ்செய்வோர் நிலையைவிட உயர்ந்தது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து குறள் 48

Leading a virtuous family life and guiding others is greater than the life of penance

ஒன்பதாவது குறளும் இல்லறமே துறவறத்தைவிடச் சிறந்தது என்று வலியுறுத்துகிறது.

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று குறள் 49

இருவகை அறத்திலும் இல்வாழ்க்கையே சிறந்தது என ஆன்றோரால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. ஏனைத் துறவறமோ பிறரால் பழிக்கப்படுவது. இல்லையாயின் நன்று. சரியானமுறையில் அநுஷ்டிக்கப்படாது விடின் நன்றன்று. இதையே ஔவையாரும் “இல்லறமல்லது நல்லறம் அன்று” என்கிறார்.

பத்தாவது குறளிலும் இல்லறத்தின் மேன்மை உணர்த்தப்படுகிறது.

வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் குறள் 50

வையகத்தில் - உலகத்தில் - இல்லறத்தில் வாழவேண்டிய முறைப்படி (தர்ம சாத்திரங்கள் கூறியபடி) வாழ்க்கை நடத்தும் ஒருவன் உலகத்தில் வாழும் காலத்திலேயே வானத்தில் (தேவ உலகத்தில்) வாழும் தேவர்களுக்கு ஒப்பாக (நிகராக) மதிக்கப்படுவான். இல்லறத்தால் இப் பிறவியில் மட்டுமல்ல, மறுபிறப்பிலும் இன்புற்று, உயர்வுற்று வாழ்வான் என்பதில் சந்தேகமில்லை.

இல்லறத்தான் தன் இல்லறத்தைச் சிறப்பாக நடத்துவதற்கு இல்லத்தரசியின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாததாகும் என்பதால் இல்வாழ்க்கை என்னும் அதிகாரத்துக்கு அடுத்ததாக “வாழ்க்கைத் துணைநலம்” என்னும் அதிகாரத்தை வைத்துள்ளார். வாழ்க்கைத் துணைவி சரியாக அமைந்துவிடில் அந்த இல்வாழ்க்கை இன்பமாகவும் நிறைவாகவும் இருக்கும்.

மனைத்தக்க மாண்புடைய ளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை — *குறள் 51*

A good wife maintains the dignity of the family and live within means of her husband

குடும்ப வாழ்க்கைக்கு ஏற்ற நல்ல பண்புகள் (கணவனுக்கு எல்லாவிதத்திலும் உறுதுணையாக நிற்றல்) நல்ல செயல்கள் (விருந்தோம்பல், பொறுமை, அன்பால் குடும் உறுப்பினரை அணைத்தல்) கணவனின் வருமானத்துக்கு ஏற்ப குடும்பச் செலவை நிர்வகித்தல் என்பவற்றைக் கொண்டவளே சிறந்த வாழ்க்கைத் துணையாவாள். இவற்றில் எது குறைந்தாலும் இல்லறம் மேன்மையடையாது. மனைவியின் நற்பண்புகளே ஒரு குடும்பத் தலைவனின் வாழ்க்கையைப் பூரணப்படுத்தும். அது இல்லாதவிடத்து அந்த இல்லத்தில் வேறு எல்லாவித வாழ்க்கை வசதியும் இல்லறத்தைப் பரிமளிக்கச் செய்யாது. எனவே ஒருவனுக்கு நல்ல மனைவி அமைந்துவிட்டால் அவனுக்கு எவ்வதக் குறையுமில்லை என்கிறார் வள்ளுவர். “இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை” என்பது முதுமொழி. “நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்” என்பது ஒரு திரையிசைப் பாடல்.

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட பேறு — *குறள் 60*


ஒரு குடும்பத்தைப் பெருமைப்படுத்தக்கூடியவள் நற்குண நற்செய்கையுடைய மனைவியேயாகும். அதற்கு அழகூட்டும் நல்ல ஆபரணங்களாக அமைவது நல்ல மக்களை (பிள்ளைகளை) பெறுவதாகும். நல்லறத்தின் வழிநிற்கும் கணவன் மனைவி நற்குணமான குழந்தைகளைப் பெற்று வளர்த்துப் புதிய தலைமுறையை இவ்வுலகில் உருவாக்குவார்கள். நல்ல குடிமக்கள் வீட்டுக்கும் நாட்டுக்கும் விலைமதிப்பற்ற பெருஞ் சொத்தாகும்.

**இருபதாம் பக்கத் தொடர்ச்சி...**
இந்த நாளில் இந்தியா மலேசியா போன்ற நாடுகளில் முருக பக்தர்கள் காவடி எடுத்து வழிபடுவர் என்றும் இந்த நாள் வித்தியாரம்பம் செய்வதற்கு மிகவும் சிறப்பானது என்றும் விளக்கி முப்பது நிமிடங்களில் தன் அருமையான சொற்பொழிவை நிறைவு செய்தார். உபயகாரர்கள் சார்பாக, திரு பிரபா கரன் அவருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். தொடர்ந்து சுவாமி வீதிவலம் வந்து சண்டேஸ்வரர் பூசையோடு பூசைகள் நிறைவடைய, விபூதிப்பிரசாதங்கள் பெற்ற பக்தர்கள் அன்னதானமும் உண்டு, விநாயகரின் அருள்பெற்ற மன நிறைவோடு வீடுசென்றனர்.

- இந்த உலகத்தில் வேரில்லாமலும் நீரில்லாமலும் வளரக்கூடிய ஒரே செடி ஆசைதான்.
- விட்டுக்கொடுங்கள்; விருப்பங்கள் நிறைவேறும். தட்டிக்கொடுங்கள்; தவறுகள் குறையும் மனம் விட்டுப் பேசுங்கள்; அன்பு பெருகும்
- மனிதன் எந்த மதத்தையும் பின்பற்றலாம் ஆனால் ஒரேயொரு மதத்தை மட்டும் பின்பற்றக்கூடாது. அதுதான் தாமதம்!
- எப்படியாவது சம்பாதிக்கவேண்டும் என்று நினைப்பவர்கள் சம்பாதித்த பணத்தை அநுபவிக்காமலேயே மாண்டு போகிறார்கள்.

- கவியரசு கண்ணதாசன்

# கண்ணனும் தாத்தாவும்



முத்து

இந்தமுறை (2020) தைப்பொங்கல் ஞாயிற்றுக்கிழமை வந்ததால், இலண்டனில் மட்டுமன்றி வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் அனைவரும் நிறைவாகப் பொங்கல் பொங்கி, சூரியனுக்கும் கடவுளுக்கும் படைத்து நன்றி பாராட்டி வணங்கினர். பின்பு குடும்பத்தினர் அனைவரும் கூடியிருந்து இனிப்பான சர்க்கரைப் பொங்கல், வெண்பொங்கல், விதவிதமான பலகாரங்கள் பழங்கள் யாவற்றையும் சுவைத்து மகிழ்ந்தனர். இந்தத் தைப்பொங்கலுக்கு கண்ணன் வீட்டுக்கு ஶ்ரீராம் குடும்பத்தினரும் ஸ்கொட்லாந்திலிருந்து வந்து கலந்துகொண்டதால் பொங்கல் பொங்கி யதுபோல எல்லோர் மனத்திலும் மகிழ்ச்சியும் பொங்கி வழிந்தது.

சிவகுமார்: எத்தனையோ வருடங்களுக்குப் பிறகு இங்கு வந்ததால் பொங்கலைக் கொண்டாடி மகிழ ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. எங்கள் குடும்பத்தினருக்கும் இது ஒரு புது அநுபவம்.

ஶ்ரீராம்: தாத்தா சொல்வது very true. நல்ல happy ஆக இருக்கிறது கண்ணா!

கண்ணன்: நீங்கள் எல்லோரும் எங்கள்கூட இருப்பது எங்களுக்கும் அளவில்லாத மகிழ்ச்சி.

தாத்தா: கூடிவாழ்ந்தால் கோடி நன்மை என்று முன்னொர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது மிக உண்மையென்று இப்போது உணரமுடிகிறது.

சிவகுமார்: ஊரில் இப்படி அடிக்கடி கூடி மகிழச் சந்தர்ப்பம் இருந்தது. இங்கு அவரவர், தன் குடும்பம், தனது வேலை என்று வாழ்க்கை மிகவும் busy ஆகப் போகிறது. இலண்டனில் கொஞ்சம் பரவாயில்லை என்று தெரிகிறது. ஆனால் ஸ்கொட் லாந்தில் வாழ்க்கை முறையே வேறுதான்.

தாத்தா: காலப்போக்கில் அங்கேயும் மாற்றங்கள் வரும். முன்னரெல்லாம் இலண்டனிலே மட்டுந்தான் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள், கோயில்கள் இருந்தன. இப்போது லிவர்ப்பூல், கொவன்றி என்று பல இடங்களிற் கோயில்கள் வந்துவிட்டன. தமிழ்ப்பள்ளிகளும் நடைபெறுகின்றன.

சிவகுமார்: எங்கள் கலாசாரம் தொடர்ந்து நிலைபெற இது வழிவகுக்கும். எங்கள் ஊரிலும் ஒரு கோயில் இருக்கிறதாம். ஆனால் சரியான விவரங்கள் தெரியவில்லை.

பாட்டி: நீங்கள் இரண்டுபேரும் உங்களுக்குப் பிடித்தமான விஷயங்களைப்

பேசிக்கொண்டு இருக்கிறீர்கள்! உங்கள் நீண்ட பயணம் எப்படி இருந்தது?

சிவகுமார்: உண்மைதான், மன்னிக்கவேணும். நாங்கள் காரில் வரவில்லை. Trainஇல் தான் வந்தோம். ஸ்ரீராம்தான் train இல் வர மிகவும் ஆசைப்பட்டான்.

ஸ்ரீராம்: I really enjoyed the scenery all the way from Scotland to London.

கண்ணன்: காலையில் நீங்கள் நேரத்துடன் புறப்பட்டதால் வழியில் சூரியோதயமும் பார்த்திருப்பீர்களே! பார்த்தாயா ஸ்ரீராம்?

ஸ்ரீராம்: ஓம் கண்ணா! நல்ல அழகான காட்சி. No words to describe it கண்ணா! அது மாத்திரமா? பனி மூடிய மலையில் சூரிய ஒளி பட்டு ஒரே வெள்ளை நிறம். எவ்வளவு அழகான காட்சி! இன்னும் எத்தனையோ அழகான காட்சிகள். நீங்கள் ஈஸ்டர் விடுமுறைக்கு எங்கள் வீட்டுக்கு வரவேணும். அப்போது நீங்களும் இப்படிக் காட்சிகளைக் காணலாம்.

தாத்தா: கண்ணனும் அங்கே வரக் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறான்.

கண்ணன்: நாங்கள் தொடருந்திலே (train) போவோமா தாத்தா? நாங்களும் காட்சிகளைப் பார்த்து இரசித்துக்கொண்டு உங்கள் கதையையும் கேட்டுக்கொண்டு போகலாம்.

பாட்டி: கண்ணனுக்குத் தாத்தாவின் விளக்கங்கள் கேட்டால்தான் திருப்தி.

கண்ணன்: தாத்தா அப்படிச் சொல்லித்தருவதாலும், தாத்தாவுடன் நான் கதைப்பதாலும், நான் பல விஷயங்கள் கற்றிருக்கிறேன்; தெரிந்து வைத்திருக்கிறேன்.

சிவகுமார்: இப்போது ஸ்ரீராமுக்கு நாங்கள் ஏன் தைப்பொங்கல் கொண்டாடுகிறோம் என்று சொல் கண்ணா!

ஸ்ரீராம்: நானே கேட்கலாம் என்றுதான் இருந்தேன் கண்ணா! Come on

கண்ணன்: (ஸ்ரீராமுக்கு விளங்கும் வகையில் கண்ணன் ஆங்கிலமும் தமிழுமாகச் சொல்கிறான்)
ஸ்ரீராம்! தமிழர்களின் முக்கிமான உணவு சோறு (rice) ஆகும். அதனைக் கஷ்டப்பட்டு உற்பத்தி செய்பவர்கள் உழவர்கள். நெல்லு வளர, hot weather தேவை, சூரியன் தேவை. ஏனென்றால் சூட்டைத் தருபவன் சூரியன். அதனால் சூரியனுக்கு நன்றி சொல்லவே தைப்பொங்கலைத் தமிழர்கள் கொண்டாட ஆரம்பித்தனர்.

ஸ்ரீராம்: சூரியன் இல்லாமல் Nothing can grow in the world. அதனால் இந்தியர்கள் சூரியனைத்தான் முதன்முதல் வணங்கினார்கள் என்று நான் எங்கேயோ வாசித்திருக்கிறேன் கண்ணா!

தாத்தா: அது உண்மைதான் ஸ்ரீராம். சூரியனை இப்போதும் வழிபடுகிறார்கள்.

கண்ணன்: அதில் தைப்பொங்கல் மிகவும் முக்கியமானது. இலங்கையில் வீட்டின் முன்னால் முற்றத்தில் (courtyard) அடுப்பு (cooker) வைத்து நெருப்பு மூட்டிப் பானை வைத்துப் பொங்குவார்கள். தண்ணீரில் பால் ஊற்றுவதால் அது சூடாகியதும் பொங்கி வழியும்.

தாத்தா: சூரியன் உதிக்கும் திசையாகிய கிழக்கை நோக்கிப் பால் பொங்கினால் சிறப்பு என்று சிலரிடம் ஒரு நம்பிக்கையும் இருக்கிறது.

ஸ்ரீராம்: இப்போது இதுவெல்லாம் youtube இல் வருகிறது தாத்தா. நான் போட்டுப் பார்க்கிறேன். இன்றைக்கு உங்கள் வீட்டிலே பொங்கல் சாப்பிட்ட பின்தான் அது எவ்வளவு special என்று தெரிகிறது.

தாத்தா: இலங்கையைவிட தமிழ்நாட்டிலேதான் பொங்கலை இன்னும் விசேடமாக நான்கு நாள்கள் கொண்டாடுவார்கள்.

கண்ணன்: முற்காலத்தில் (இயந்திரங்கள் பயன்படுத்தத் தொடங்குமுன்பு) எருதுகள்தான் நிலத்தை உழுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. பசுக்கள் பால் கொடுத்தன. மாட்டின் சாணம் (cowdung) வீடு மெழுகுவதற்கும் தோட்டப் பயிர்களுக்குப் பசளையாகவும் பயன்படுத்தப்பட்டது. அதனால் மாட்டுக்கு நன்றிசொல்லும் வகையில் மாட்டுப்பொங்கல் கொண்டாடுவார்கள் என்று தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் படித்திருக்கிறேன். ஏன் நான்கு நாள்கள் கொண்டாடுகிறார்கள் தாத்தா?

தாத்தா: முதல் நாள் வீட்டிலுள்ள பழைய பொருள்களைத் தூக்கி எறிந்து வீடு முழுவதும் சுத்தம் செய்து அலங்கரிப்பார்களாம். இரண்டாம் நாள் பொங்கல், மூன்றாம் நாள் மாட்டுப்பொங்கல், நாலாம் நாள் பொது இடங்களில் மக்கள் கூடி மகிழும் முறை முன்னர் இருந்துள்ளது.

சிவகுமார்: அப்படிக் கொண்டாடி மகிழ்வதால் அங்குள்ள மக்களுக்கு stress (மன அழுத்தம்) இல்லை, நோய் நொடியும் இல்லை.

தாத்தா: வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப்போகும் என்று தெரியாமலா அவர்கள் சொன்னார்கள்?

கண்ணன்: தாத்தா சூரியனுக்கு மட்டுமல்ல, நாங்கள் உண்ணும் பொருள்கள் அனைத்தையும் உற்பத்தி செய்யும் எல்லோருக்குமே நன்றி சொல்லவேண்டும்.

ஸ்ரீராம்: கண்ணன் சொல்வது correct. நாங்கள் many variety of foods சாப்பிடுகிறோம். அதனால் அவற்றைப் பயிர்செய்யும் விவசாயிகளுக்கும் பொங்கலன்று நன்றி சொல்லவேண்டும்.

சிவகுமார்: நாங்கள் இந்தமுறை கண்ணன் வீட்டில் எப்படிப் பொங்கல் கொண்டாடுவது என்று பார்த்தாச்சு. ஸ்ரீராமின் அம்மாவும் பாட்டியும் (Scottish women) பொங்கல் செய்வது எப்படி என்பதும் அதற்கு என்னென்ன பொருள்கள் தேவை என்பதெல்லாம் அறிந்துவிட்டார்கள்.

ஸ்ரீராம்: அடுத்த வருடம் எங்கள் வீட்டில் இதேமாதிரிப் பொங்கல் கொண்டாடலாம். கண்ணா! தாத்தா பாட்டியையும கூட்டிக்கொண்டு நீங்கள் எல்லோரும் எங்கள் வீட்டுக்கு வரவேண்டும்.

பாட்டி: ஸ்ரீராம்! தைமாதம் ஸ்கொட்லாந்தில் மிகவும் குளிராக இருக்கும். அதனால் நாங்கள் சித்திரைப் புதுவருடத்துக்கு வருகிறோம். ஈஸ்டர் விடுமுறையும் கிட்ட வரும். பொங்கல் செய்யலாம். நாங்கள் வரும்போது தேவையான பொருள்கள் எல்லாம் நாங்கள் வாங்கிக்கொண்டு வருகிறோம்.

ஸ்ரீராம்: OK பாட்டி. எங்களுக்குக் குளிர் பழகிப்போச்சு, உங்களுக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும்.

கண்ணன்: குளிர் மட்டுமா ஸ்ரீராம்? மழையுமல்லவா எப்போதும் பெய்யும்.

சிவகுமார்: ஸ்ரீராம்! வீட்டுக்குப் போக நேரமாச்சு, இனிக் கிளம்பவேண்டும். 3 மணிக்கு train.

ஸ்ரீராமின் பாட்டி: Thank you all. We had an excellent Pongal and a wide vareity of snacks. Nice seeing you all.

கண்ணனின் பாட்டி: You are always welcome.

சிவகுமார்: பொங்கல் சாப்பிட்டு வயிறு நிரம்பியது. உங்களை நேரிலே பார்த்துப் பேசிய தால் மனமும் நிரம்பியது. முழு உணர்வையும் வார்த்தைகளிற் சொல்ல இயலாது. அவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது.

தாத்தா: மனதிற்குப் பிடித்தவர்களைச் சந்திப்பதில் ஏற்படும் சந்தோஷத்துக்கு ஈடு இணையில்லை. அதுபோல பிரிவதிலும் துக்கந்தான். ஆனால் மீண்டும் சந்திப்போம்.

கண்ணன்: நேரம் போனதே தெரியவில்லை. நானும் ஸ்ரீராமும் இனித்தான் ஒரு Game விளையாடலாம் என்று யோசித்தோம். இன்னும் ஒரு நாள் எங்களுடன் இருந்துவிட்டுப் போகலாமே! (முகத்தில் கவலையுடன் கண்ணன் சொன்னான்)

ஸ்ரீராம்: It is sad. அப்பா அம்மாவுக்கு லீவு எடுக்க முடியவில்லை. (கவலையுடன் சொன்னான் ஸ்ரீராம்)

தாத்தா: இரு நண்பர்களின் முகத்தையும் பாருங்கோ சிவகுமார்! அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

சிவகுமார்: ஆமாம் கண்டது ஆனந்தம் பிரிவது கவலை. எங்களைவிடப் பிள்ளைகளின்

முகந்தான் வாடிப்போய்விட்டது.

*ஸ்ரீராம்:* தாத்தா என்ன சொல்கிறார்?

*கண்ணன்:* நாங்கள் இருவரும் சந்தித்தவுடன் சந்தோஷப்பட்டோம். இப்போது upset ஆகிவிட்டோம். என்று சொல்லி ஒரு தமிழ் proverb சொன்னார் தாத்தா.

*ஸ்ரீராம்:* அதை English இல் சொல் கண்ணா!

*கண்ணன்:* Face is the index of the mind

*ஸ்ரீராம்:* That is a good one. முகந்தானே எங்கள் feelings ஐ reflect பண்ணும்.

*சிவகுமார்:* சரி! எல்லோருக்கும் Bye சொல்லிக் கிளம்புவோம்.

*ஸ்ரீராம் கண்ணனைக் கட்டியணைத்து விடைபெற, பெரியவர்களும் விடைபெறுகிறார்கள். சிவகுமார் குடும்பம் ரயில் நிலையத்தை நோக்கிச் செல்கின்றனர்.*

*பின் குறிப்பு: இந்தச் சந்திப்பு 2020 ஜனவரி 15 ஆம் திகதி பொங்கலன்று நடைபெற்றது. அவர்கள் பேசியபடி கண்ணன் தன் குடும்ப உறுப்பினருடன் ஸ்கொட்லாந்தில் இருக்கும் கண்ணன் வீட்டுக்குச் செல்ல இயலவில்லை. கோவிட் 19 தொற்றுநோய் பரவிய காரணத்தால் அவரவர் வீடுகளில் இருந்தபடியே நவீன தொழில்நுட்பக் கருவிகள் மூலம் தொடர்புகொண்டு பேசி மகிழ்ந்தனர்.*

## ஐயம் தெளிவோம்

**கேள்வி:** நம் இதிகாச புராணங்கள், வேதங்கள் ஆகியவற்றில் விஞ்ஞான விஷயங்கள் பல இருக்கின்றன. சில விஷயங்கள் செயற்படும் விதத்தைத் தெளிவாகவும், பெரும்பாலான விஷயங்களை மறைமுகமாகக் கூறி ரகசியத் தன்மையும் கலந்து, புலனுக்குத் தென்படாமல் வைத்திருக்கிறார்களே..ஏன்?

**பதில்:** விதையிலேதான் மரம் இருக்கின்றது. எப்படி நம்புகிறோம்? எல்லாமே பெரியவையாக இருப்பின் நமக்கு அதைக் கையாள்வது கடினமாக இருக்கும். பல லட்சங்கள் மதிப்புடைய பணமானது சுருங்கி மற்றவருக்குப் புரியாத வண்ணம் காசோலையாகவும் கடன் அட்டையாகவும்(கிரெடிற் காட்), தங்கம், வைரம் போன்ற பொருள்களாகவும் பரிணமிக்கின்றது அல்லவா! நமக்கு சவுகரியமாகவும் இருக்கிறது.
இப்போது சத்துள்ள ஆகாரங்களைக்கூட மாத்திரை வடிவில் கொடுக்கிறார்கள். இதுபோலத்தான் இறைவனும் நமது நலனுக்காக மிக உயர்ந்த தத்துவங்களை மிக எளிமையாக நாம் கடைப்பிடித்து உயர்ந்த பலன்களை அடைய வேதங்கள் முதலானவற்றை நமக்கு அருளி இருக்கிறார்.
அவை விஞ்ஞானத்தைவிட மேலானவை என்று ஆத்திகர்களினால் நம்பப்படுகின்றது. அதற்கு முக்கிய தகுதியாக நம்பிக்கையையே சொல்லப்படுகிறது. எனவேதான் “நம்பினோர் கெடுவதில்லை. இது நான்குமறைத் தீர்ப்பு” என்றனர். எவரொருவர் வேதம் என்பது சத்தியம், நித்தியம், அது நம்மைக் காப்பாற்றுவதற்காகக் கடவுளால் அருளப்பட்டது என நம்புகிறார்களோ, அந்தச் சாத்திரம் அவர்களைக் கைவிடாது என்பது சத்தியம்.
அனைத்துக் காரியங்களுமே நாம் தெரிந்து கொண்ட பிறகுதான் செய்வோம் என்றால், நம்மால் நமது உணவைக் கூட உண்ண முடியாது. நாம் நமது உணவுக்குழாய் என்பதைப் பார்த்திருக்கிறோமா? அறிவியலில் இதுபோலத்தான் இருக்கும் என்று சொல்கிறார்கள். நாம் நம்புகிறோம். அதுபோல, பகவான் அருளிய சாத்திரங்களிலும் பல இரகசியங்கள் அடங்கியுள்ளன. அவற்றை நாம் நம்பிக்கையுடன் பின்பற்றினால், கண்டிப்பாக கடவுள் நம்மைக் காப்பாற்றுவார்.

**-அறிவோம் ஆன்மிகம்**

# HINDUISM In search of answers........

**Compiled by: S Atputhananthan**

# Hindu Wedding Ceremony

The Hindu wedding ceremony is a series of rituals based on Vedas and Saiva Agamas (part of the Hindu Scriptures), replete with 2000-year-old tradition, symbolism and allegory. It is both worship and declaration combined and performed for social, religious, individual fulfilment, celebration and continuity of culture. Some aspects of the Hindu wedding cereony differ according to regional customs and have evolved over the years according to time and place. In a Saivite Hindu ceremony the heavenly hosts - Lord Siva, Goddess Parvathi, Agni (the god of fire – considered the eternal witness) and the spirits of the forefathers are invoked as witnesses and sponsors. Hence, the ceremonial area is holy ground.

Veda mantras or sacred hymns play a key role in every step of the traditional Hindu marriage. The mantras for this ceremony come mostly from the tenth mandala of the Rig Veda, where Suryaa, the daughter of the sun god, is given in marriage to a bridegroom by the name of Soma. These mantras are mostly from section 10.85. Refer to the original texts and avoid misinterpretations of these mantras in the social media.

**What are some of the significant steps in a Tamil Hindu Wedding Ceremony in Sri Lanka?**

## Before the Ceremony:

An auspicious time is chosen by the priest for the climax when the Groom ties the 'Thaali' to the bride. The tholan (best man, usually the bride's brother) goes to the groom's house. There the groom is seated in front of 'poorna kumbam'. The parents, elders and the tholan bless the groom with dash of milk and dharba grass on his head. He is taken to have bath and made to look like a king. The groom and tholan, after prayers, accompanied by ladies who carry gifts together with thali and koorai (Wedding sari) in trays, proceed to the wedding hall. (this can be the Bride's home)

The hall itself is decorated colourfully, the centrepiece of which is a 'Manavarai' (decorated nuptial throne for the bride and groom). The priest sets up the ceremonial area with kumbams along with other necessary items for the religious aspect of ceremony. The bride arrives early and settles to the changing room out of sight with her 'Tholis' (friends).

## Welcoming the Bridegroom:

The bride's parents, together with close relatives and friends, receive the bridegroom and the best man with the accompaniment of Nathaswaram music. The bride's father garlands the

bridegroom. The best man sprinkles the groom's feet with water and in turn receives a gold ring as a sign of affection. To ward off the evil eye a traditional 'Aarati' is performed by two ladies. The bridegroom is then led to the Manavarai (Ceremonial seat).

A murukkam tree, (a thorny tall tree found in Jaffna Sri Lanka.) is significantly planted in the centre. This is to symbolise the king of heaven Indra whose inappropriate behaviour with Ahalya, the wife of Sage Gautama, landed him a curse which resulted in him gaining 1000 eyes. The thorns represent the eyes. This is to caution the groom against any such deviant behaviour. The grinding stone (Ammi) is placed on the right side to symbolise Ahalya and to caution the bride.

## Sanctification:



The priest now commences the proceedings by offering a prayer to Lord Ganesha, invoking his blessings so that the wedding may take place without any hindrance. The groom accepts a thetppai (a ring made of a special grass) to indicate his willingness to proceed. Five married ladies sow nine varieties of grains in an earthen pot, signifying the blessings of fertile life for the couple (Paalihai ceremony). The priest then ties a blessed thread on the wrist of the groom to confer divine protection (Kaapu). A respected relative breaks a coconut at this juncture and several other important points as guided by the priest. The groom now leaves the Manavarai and takes his place among the audience.

The bride now comes to the Manavarai accompanied by the bridesmaid, flower girls and close relatives. The priest performs the same ceremony again for the sanctification and protection of the bride.

The groom joins the bride at the Manavarai and the main ceremony begins. The priest invokes Lord Siva and the Goddess Parvathi on Kumbam and performs Siva Parvathi pooja followed by Navagraha pooja for the celestial bodies. Homam (sacred fire) is lit and a special pooja is then performed.

## Kannihaathaanam:

This is the giving away of the bride by offering her to the groom in marriage. The priest announces loudly the names of the bride and groom, referring to their ancestors up to three generations. He then calls upon Agni (Fire) and all present, seen and unseen, to bear witness to the event and bless the couple.

Thaali is a gold pendant inscribed with sacred emblems, the thirisulam (representing Brahma, Vishnu and Siva), and sun and moon (representing Siva and Shakti). In the olden days 'manchal kayiru' (string immersed in turmeric), with raw turmeric stick tied as pendant,

was used.

The Thaali and the Koorai (bridal sari) brought by the groom are blessed by the priest and then presented by a senior member of the family to the congregation for their blessing. The groom then presents the Koorai to the bride. The bride leaves the Manavarai to change into the Koorai. When she returns, attired in Koorai, she then garlands the Groom.

## Thaali Ceremony (Maangalya Dhaaranam):



This is the main event of the wedding. The Thaali is consecrated by the priest and given to the groom. At the appointed auspicious time, amidst chanting of mantras, he ties it around the bride's neck and they become man and wife. This is accompanied by a crescendo of music and a shower of flowers from the congregation. The couple exchange garlands and feed each other milk and fruit symbolizing their partnership for life.

The thali kattu is termed moonru mudichu in Tamil where the groom, with three nuptial knots, ties the string.

There is no Veda Mantra for tying the Thaali. The priest recites the following traditional Sanskrit verse on behalf of the groom:

Maangalyam tantunaaena mama jeevanaa hethunaa I
kanthe: badhnami subhage! sanjeeva Sarada: Satam II

Meaning: By this sacred thread which I tie around your neck, O maiden, having many auspicious attributes and being essential part of my life, may you live happily for a hundred years (with me).
The groom also places a kumkuma pottu on bride to signify her married status.

## Paani Grahanam:

After maangalya dhaaranam, the groom lowers his right palm and encloses it over the right hand of the bride. He covers all the five fingers of the right hand of the bride with his right palm through this act of paani grahanam. The paani grahanam ritual symbolises the inseparable connection of the couple from the day of the marriage.

## Saptapathi:

According to Hindu Dharma Shastara (law codes) Yajgnavalkya Smrithi, the completion of the seventh step is the moment of completion of marriage.
During this ritual, the groom walks with the bride to the right side of the sacred fire. All along, he holds his wife's right hand in his right hand in the way in which he held her hand during the paani grahanam ceremony. At the beginning of each step, he recites a Veda mantra to

invoke the blessings of Maha Vishnu. Through these seven mantras, he asks Maha Vishnu to follow in the footsteps of his wife and bless her with food, strength, piety, progeny, wealth, comfort and health. At the conclusion of the seven steps, he addresses his wife with a moving statement which is summarised below:
"Now let us make a vow together. We shall share the same food, share the strengths, the same tastes. We shall be of one mind, we shall observe the vows together; I shall be the Saama, you the Rigveda; I shall be upper world, you the earth; Together we shall live and beget children, and other riches. Come thou, Oh, sweet-worded girl."

**Pradakshinam:**



The couple take their first steps together as man and wife by walking around the sacred fire three times to pay their respects to Agni.

**Stepping on the grinding stone (Ammi Mithithal):**

n the first round, the groom places the bride's right foot on a granite stone (Ammi in Tamil), a symbol of integrity and strength. He puts a silver ring on her second toe. This alludes to the story of Ahalya, whose inappropriate act with the lord of the heaven Indra resulted in her being cursed into becoming a stone and Indra into becoming an ugly person with 1000 eyes. The thorny Murukkam Tree in the centre symbolises Indra with 1000 eyes (thorns). Ahalya was freed from the curse by Lord Rama. At this moment, the groom wears a minji – a silver ring on her toe to say that he will protect her forever.

In the second round, priest symbolically shows the Arunthathy star in the high sky to the couple. Legend has it that Arunthathy, the wife of Vedic Sage Vasishta was a devoted dutiful wife. The sage was so enamoured by her deep devotion and love, that he placed her a star in the sky for the future brides to look up to and lead their own life. In western astronomy, the star of Vasishtar is called Mizar and the star of Arunthathi is called Alcor. They are optical double stars, meaning they are always seen together. A nearby star Dhruva (or the Pole star, which is always fixed in one place) is shown to the groom. In Hindu mythology Dhruva is an example of the steadfastness in achieving a goal.



In the third round they compete to pick a ring from a vessel filled with coloured water to emphasize the importance of a 'give and take' attitude to life.

At the end the couple offer grain, honey and fruit to the fire symbolizing a yajna (sacrifice) whereby all the fruits of our actions are surrendered to God.

The ceremony concludes with the Aarathi performed by

sumangali ladies and Aseervatham when the couple receive the blessing of the priest, their parents and those who have witnessed the ceremony. This is done by sprinkling blessed rice and Aruku (a type of grass) for a long and happy married life.




According to Hinduism the marriage is where one enters the all important householder's stage of life to uphold the Purusharthas ie. the four fold aims of life: Dharma (Aram in Tamil - righteousness), Artha (Porul in Tamil – Acquisition of material needs), Kama (Inbam in Tamil – fulfilment of desires) and Moksha (Veedu – the ultimate salvation of the soul).

Sacred weddings of Gods are (Thiru Kalyanam) are performed in the temples to remind us of these Vedic traditions behind a Hindu marriage.

# ஐந்தெழுத்தின் மகிமை

## -திருமதி வசந்தா மகாதேவன்

### ஐந்தெழுத்தின் பெருமை

நமசிவாய என்னச் செல்வம் பெருகும்.
நமசிவாய என்னக் கல்வி ஞானம் வளரும்.
நமசிவாய என்ன நோய்கள் அகலும்.
நமசிவாய என்னக் குடும்ப மகிழ்ச்சி பெருகும்.
நமசிவாய என்னத் தொழில்கள் அமையும்.
நமசிவாய என்னக் கடன் தொல்லை தீரும்.
நமசிவாய என்னப் பில்லி சூனியம் அகலும்.
நமசிவாய என்ன வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

### திருநீற்றின் பெருமை

திருநீறு அணிந்தால் தலைவலி, தோல் நோய்கள் அகலும்.
திருநீறு அணிந்தால் வெப்பு நோய் அகலும்; சிறுநீரகக் கல் கரையும்.
திருநீறு அணிந்தால் பாவம் நீங்கும்; வருத்தம் தணியும்.
திருநீறு அணிந்தால் சிவ புண்ணியம் வந்து சேரும்.
திருநீறு அணிந்தால் பித்ரு தோஷம் நீங்கும்.
திருநீறு அணிந்தால் உடல், மனம், உயிர் தூய்மை பெறும்.
திருநீறு அணிந்தால் இல்லத்தில் சிவகடாட்சம் பெருகும்.

# சைவமுன்னேற்றச்சங்கத்தின் வெளிநாட்டுப் பணிகள்

சங்கத்தின் வெளிநாட்டுத் திட்டச் செயலாளர் 2020 ஆண்டில் இலங்கையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழுபவர்களுக்கு செய்த உதவிகளிற் சில:-

திரு, திருமதி கணேசலிங்கம்
திருமதி .சிவஞானவதி கந்தப்பு
திருமதி இரத்தினேஸ்வரி நவரத்தினம்
திருமதி பத்மா சர்வானந்தா
திருமதி. புவனேஸ்வரி சபாரத்தினம்
ஆகியவர்களின் பங்களிப்புடன் 360 பவுண் (£360) பெறுமதியான மடிக்கணினி ஒன்று மட்டக்களப்பு வந்தாறுமூலை பல்கலைக்கழக மாணவியான செல்வி தனுசா கணேசலிங்கத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த ஐந்து விதவைகளுக்குச் சுயதொழிலை ஊக்குவிக்கு முகமாக ஒருவருக்கு 50 பவுண் வீதம் 250 பவுண் (£250)வழங்கப்பட்டது.
இதற்கு,
திருமதி. புவனேஸ்வரி சபாரத்தினம்
திருமதி. கலா கந்தசாமி
திருமதி தவமணி ஜனகா
திருமதி ஸ்ரீபதி பொன்னுத்துரை
திருமதி. சொர்ணமலர் முருகையா ஆகியோர் அன்பளிப்புச் செய்திருந்தனர்.



# பிரதான அனுசரணை



## ANNAI SIVAHAMY FOUNDATION - UK
## அன்னை சிவகாமி அறக்கட்டளை பிரித்தானியா



Registered Charity No: 7032180 (UK)




## அன்புக் கரம் கொடுப்போம் !

Telephone Number : 020 8514 2678 Fax : 020 8514 6963 Mobile : 07809 399 546
Web : www.annaisivahamyfoundation.org
329 Ley Street, Ilford, Essex, IG1 4AA.


WESTERN
Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.. உங்கள் வெஸ்டன் ஜுவலர்ஸ்.
SRI LANKAN FIRST JEWELLERY SHOP IN UK
Specialise in 22 ct Gold, White Gold, Platinum
& Diamond Jewellery.
Tooting Branch.
NO : 230
UPPER TOOTING ROAD
LONDON,
SW17 7EW
TEL : 020 8767 3445
Wembley Branch.
5 PLAZA PARADE,
29 -33 EALING ROAD,
WEMBLEY, MIDDX,
HAO 4YA
TEL : 020 8903 0909
SILK
EMPORIUM
TEL : 0208 6721 900
122 UPPER TOOTING ROAD,
LONDON, SW17 7EN.